உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

இருபத்துமூன்றாந்தொகுதி.

VOL. XXIII.

ரக்தாக்ஷி—குரோதன௵

1924-1925.

பத்திராதிபர்:—திரு. நாராயணையங்கார்.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலைப்

பதிப்பு.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

இருபத்துமூன்றாந்தொகுதி.

VOL. XXIII.

ரக்தாக்ஷி—குரோதன௵

1924-1925.

பத்திராதிபர்:—திரு. நாராயணையங்கார்.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலைப்

பதிப்பு.

உ

செந்தமிழ்.

இருபத்துமூன்றாந்தொகுதியின்

உள்ளுறை.

விஷயம்.	எழுதியவர்.	பக்கம்.
அநுதாபக்குறிப்பு:—	பத்திராதிபர்.	௧௧௫, ௧௫௦, ௪௦௦.
ஆங்கிலத்தமிழ்ப் பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு:—		௨௭௫
ஆசிரியர் நல்லந்துவனார்காலம் :—	ஸ்ரீமத். சோமசுந்தரதேசிகர்.	௮௭
இரங்கற்பாக்கள்:—	,, M. K. M. அப்துல்காதிறு ராவுத்தர்.	௧௫௨.
இராஜராஜதேவருலா:— ஷை அநுபந்தம்:- ஒரு குறிப்பு:—	ஸ்ரீமத். S. வையாபுரிப்பிள்ளை, B.A., B.L.,	௩௭௭, ௪௪௧, ௪௫௩. ௪௯௯.
ஒரு சிறப்புப்பட்டம்:—	பத்திராதிபர்.	௬௯
ஓர் பாடாந்தரம்:—	ஸ்ரீமத் பண்டித. ரா. திம்மப்ப ஐயர்.	௩௩
கம்பர் கவிநயம்:—	ஷை	௨௧௫
கம்பராமாயண இன் கவித்திரட்டு:—	ஸ்ரீமத். வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.	௨௫, ௬௧, ௧௪௧, ௧௭௩, ௨௪௩, ௩௨௫, ௪௮௫.
கருணாகரத்தொண்டைமான்:—	,, மு. இராகவையங்கார்.	௨௮௫.
கருணாகரத் தொண்டைமானின் கல்வெட்டுகள்:—	,, A. S. ராமநாதையர்.	௯௨

கலிங்கத்துப்பரணி யாராய்ச்சி:—	ஸ்ரீமத். மு. இராகவையங்கார்.	கூஎ, கஎகூ.
கலிங்கத்துப்பரணி யாராய்ச்சிச் சங்கோத்தரம்:—	ஷை	௩சக
கலிங்கத்துப்பரணி யாராய்ச்சியைப் பற்றிய சில குறிப்புக்கள்:—	ஸ்ரீமத். பண்டித. அ. கோபாலையர்.	உகூரு
கஜவிதிநூல்:—	,, சே ரா. சுப்பிரமணியக்கவிராயர்	௩கூக,
கௌடில்யரது அர்த்த சாஸ்த்ரம்:—	,, ஜி. ஹரிஹரசாஸ்த்ரி.	உஉகூ, உ௩௩. ச௦க.
சின்னமனூர்ப் பாண்டியசாஸனத்தின் வடமொழிப்பகுதி:-	,, A. S. ராமநாதையர்.	உருஎ
சின்னமனூர் ராஜஸிங்கன் சாஸனம்:—	ஷை	உககூ.
செந்தமிழ்ச்சங்கம்:—	பொ. ஆ.	௩எ
சென்னை ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தஸபையின் பதினைன்காவது வார்ஷிக மஹாசங்க அக்ராஸனர் உபந்யாஸம்:—		சக
ஷை சங்க வரவேற்பு ஸபாத்யக்ஷரின் ஸ்வாகத நிவேதன பத்ரிகை:—		ரு௩
தமிழ்மக்களுக்கு ஒரு விண்ணப்பம்:—	ஸ்ரீமத். மா. சுவாமிநாதன்.	௩ருகூ
தனித்தமிழ்ப் பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு:—		உஎச
திருக்குறளையங்கள் —	ஸ்ரீமத். பண்டித. சத்தியவாகீசுவரையர்.	௩கரு
திருவள்ளுவர் நூல்நய ஆராய்ச்சி:—	,, A. பூவராகபிள்ளை.	கரு௩
தொல்காப்பிய வாராய்ச்சி:—	,, K. S. நவநீதகிருஷ்ணபாரதி.	உகூகூ

நன்னூல் சங்கரநமச்சிவாயருரை:— } பத்திராதிபர். ௫00

பட்டத்தான் மங்கலம் செப்பேடுகள்:— } ஸ்ரீமத். சோமசுந்தரதேசிகர். ௧௯௩

பத்திராதிபர் குறிப்பு:— ௪௫௭

பிழையுந்திருத்தமும்:—௧௨0, ௧௭௨, ௩௬0, ௩௭௫.

புண்ணியம்:— ஸ்ரீமத். சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர். ௪௫௫

புரூரவசரிதை:—உதவிப்பத்திராதிபர். ௨௭௨, ௩௩௧, ௩௯௫, ௪0௯.

பொற்கிழியுதவிய புகழுரை:— } ஸ்ரீமத். சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர். ௨௮௧

மணிமேகலை:— ,, இ. மு. சுப்பிரமணியபிள்ளை. ௨0௭

மதங்கசூளாமணி:— ,, சுவாமி—விபுலாநந்தர். ௧, ௭௩, ௧௨௧, ௧௬௧, ௨0௧

மதிப்புரை:—௩௯, ௬௯, ௧௧௫, ௧௫௧, ௨௨௯, ௩௧௬, ௩௫௬, ௩௯௮.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் இருபத்து நான்காம் வருடக் கொண்டாட்ட நிகழ்ச்சி விவரம்:— } உதவிப்பத்திராதிபர். ௩0௭

ஷை கொண்டாட்ட மங்களவாழ்த்து:— } ஸ்ரீமத். சு. நல்லசிவன்பிள்ளை. ௨௩௬
,, ம. கோபாலகிருஷ்ணையர். ௨௪௧

ஷை சங்கத்தின் வரவு செலவு கணக்கு:— } (பகுதி-௨, ௩, ௪, ௫, ௬, ௭.)

ஷை சங்க நிர்வாகஸபைத்தீர்மானங்கள். ௧௩௯, ௨௨௪

ஷை சங்க மஹாஸபைத் தீர்மானங்கள்:— ௨௬௩

முத்தரையர் சரித்திரம்:— } ஸ்ரீமத். ப. ரு. சிதம்பரமுத்தரையர். ௩௨௧

முன்னுரை :—	ஸ்ரீமத். பண்டிதமணி. மு. கதிரேசச் செட்டியார்.		௪௫அ
மேல்புலக்கல்வி முறைகள் :—	,,	சோமசுந்தரதேசிகர்,	௩௪௬, ௪௩௫
மேலைச்சிவபுரிச் சன் மார்க்கசபையின் 16-ம் ஆண்டுத் திருவிழா :—	,,	வ. பழ. சா. சாமிநாதன் செட்டியார்.	௩௭௬
வள்ளுவர் திருநாள் :—	,,	S. வையாபுரிப்பிள்ளை B.A., B.L.,	௧௩௧

இத்தொகுதியில் வெளிவந்த நூல் :—

[முற்றுப்பெறாதது.]

பெருந்தொகை :— ஸ்ரீமத். மு. இராகவையங்கார். (௧, ௨, ௪, ௬, ௮, ௯, ௧0, ௧௨. பகுதிகள்.)

உ

கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி உ௩.] ரக்தாக்ஷி௵ கார்த்திகைமீ [பகுதி க.

Vol. XXIII. November-December-1924. No. 1.

மதங்கசூளாமணி.

எடுத்துக்காட்டியல்.

[உஉ-ம் தொகுதியின் ௪அ௯-ம் பக்கத் தொடர்ச்சி.]

எ. மேலைநாட்டிற் றோன்றிய தலைவர்களுள்ளே தனிப்பேர் என் தலைமைவாய்ந்த வீரராகிய யூலியசீசருடைய ஆற்றலும் ஆண்மையும் மேல்புலத்தாரது இதிகாசநூல்களினுள்ளே சிறப்புறக் கூறப்படுவன. கல்வியினாலும், அஞ்சுதக்கன கண்டவிடத்து அஞ்சாமையாகிய தறுகண்மையினாலும், இன்பமும் பொருளும் இறப்பப் பயப்பினும் பழியொடுவருவன செய்யாமையாகிய இசைமையினாலும், உயிரும் உடம்பும் உறுப்பும் முதலாகிய எல்லாப்பொருளுங் கொடுத்தலாகிய கொடையினாலும் மிகச் சிறந்துவிளங்கியவராகிய யூலியசீசர் பெருமிதமேயுருவெடுத்த தன்மை வாய்ந்தவர். வணிகதேயவர்த்தகனாகிய அநந்தனிடத்து இசைமை கொடையாகிய இரண்டும்பற்றிப்பெருமிதங் காணப்பட்டது. யூலியசீசரிடத்து எஞ்சியவிரண்டுஞ் சிறப்புறக் காணப்படுவன. இவரைக் கதாநாயகனாகக்கொண்டெழுந்த நாடகத்தினது கதைச்சுருக்கத்தையும் பெருமிதச்சுவை தோற்றுகிற சிற்சில பாகங்களினது மொழிபெயர்ப்பையுந் தருவாம். விரிவஞ்சிச் சந்திபிரிக்காது கதைச்சுருக்கத்தைத் தொகுத்தெழுதுவாம். மேற்போந்த ஏழு சரிதைகளினுட் சந்தியமைப்பை நுணுக ஆராய்ந்தோமாதலினால் இதனுள்ளும் மேல் வருஞ் சரிதைகளினுள்ளும் சந்தியமைப்பை யாராயாதுவிடுத்துச் சுவையையும் தலைமக்களியல்பையும் பெருக ஆராய்வாம். இச்சரிதையும் இதற்கடுத்த சரிதையும் இதிகாசத்தினபாற்பட்டன வாதலின் இவற்றினுள் வருகின்ற சிறப்புப்பெயர்களை வேறுபடுத்தாது முதனூல்வழக்குப்படியே வழங்குவார்.

செந்தமிழ்

இற்றைக்குச் சற்றேறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன்பு மேலைத் தேயம் முழுவதற்கும் ரோமாபுரி தலைநகராக விளங்கியது. சிறந்த சேனைத்தலைவராகிய யூலியசீசர் ரோமாபுரிக்குத் தென்மேற்குப்பாகத்தி லுள்ள தேசங்களையெல்லாம் வெற்றிகொண்டு ரோமாபுரியிற் றமக்கு மாறுகொண்டெழுந்த சேனைத்தலைவர்களையும் மேற்கொண்டு தனியரசு புரிந்துவந்தனர். பெருமிதம்நிறைந்த இவரது ஆட்சியைப் பொது ஜனங்கள் பெரிதும் விரும்பினர். ஜனத்தலைவருட் சிலர் அழுக்காற்றி னாலும் பிற காரணங்களினாலும் இவர்மேல் வெறுப்புற்று இவ ருயிர்க்கு இன்னல் விளைப்பதற்குத் தருணந் தேடிக்கொண்டிருந்தனர்.

[இதுவரையுங் கதைத்தொடர்பை யுணர்த்தும்பொருட்டு நாடகத் துக்குப் புறம்பான நிகழ்ச்சிகள் சிலவற்றைக் கூறினோம்; இனி நாடகத் தினுள் எடுத்துரைக்கப்பட்ட நிகழ்ச்சிகளைக் கூறுவாம்.]

காஷியஸ் எனப் பெயரிய ஜனத்தலைவனொருவன் கஸ்கா, திரே போணியஸ், லிகாறியஸ், டேசியஸ், சின்னா, சிம்பர் என்போரையும் ... னும் யூலியசீசரது நண்பனுமாகிய மார்க்கஸ் புரூட்டஸையும் ...யப்படுத்திப் பங்குனித்திங்களின் நடுநாளில் நண்பகலில் அத்தாணி மண்டபத்தில் யூலியசீசரது உயிரைக் கவர்வதற்கு ஏற்பாடுசெய்தனன். குறித்த தினத்துக்கு முன்னாளிரவில் விண்வீழ்கொள்ளிகளும், தூம கேதுக்களும் பலவகை யுற்பாதங்களும்நிகழ்ந்தன. யூலியசீசரின்மனைவி யாகிய கல்பூர்ணியா தீக்கனாக் கண்டு நள்ளிரவில் அச்சமுற் றெழுந்து புறத்தே நிகழுகின்ற உற்பாதங்களினால் உள்ளம் அவலித்துத் துயி லொழிந்திருந்து காலைப்பொழுதுவந்ததும் கணவனது முன்னிலையை யடைந்து,

> ''பேரிரவில் நடந்தவெலாம் பீழையினை விளைக்கப்
> பேதலிக்கு முளச்சிறியேன் பேசுகின்ற மொழிகள்
> ஆருயிர்க்குத் தலைவனின தருட்செவியில் வீழ்க
> அகத்திடையின் றிருந்திடுக அவைபுகுத லொழிக''

எனக் குறையிரந்து வேண்டிநின்றனள்.

அதனைக் கேட்ட சீசர் புன்னகை புரிந்து,

> ''அஞ்சினர்க்குச் சதமரண மஞ்சாத நெஞ்சத்
> தாடவனுக் கொருமரண மவனியிசைப் பிறந்தோர்

துஞ்சுவரென் றறிந்திருந்தும் சாதலுக்கு நடுங்குந்
துன்மதிமு டரைக்கண்டாற் புன்னகைசெய் பவன்யான்
இன்னலும்யா னும்பிறந்த தொருதினத்தி லறிவாய்
இளஞ்சிங்கக் குருளைகள்யாம் யான்மூத்தோ னெனது
பின்வருவ தின்னலெனப் பகைமன்ன ரறிவார்
பேதுறல்பெண் ணணங்கேயான் போய்வருதல் வேண்டும்."

எனக் கூறினர்.

இத்தருணத்தில் டேசியஸ் என்பவன் வந்து அத்தாணிமண்டபத்திற் குழுமியிருந்த முதியோர் சீசரை அழைத்துவரும்படி சொல்லியதாகத் தெரிவித்தான். சீசர் முன்பு மறுத்துப் பின்பு இயைந்து உடன்போயினர். வழியில் ஒருசேவகன் ஒருநிருபத்தைக் கொண்டுவந்து கொடுத்து "இது சீசருடைய சுகத்தைக் கோரியது, இதனை யுடனே படித்தருளவேண்டும்" எனச் சீசர்கையிற் கொடுத்தனன். "நல்லது நண்ப! ஜனங்களுடைய சுகத்தைக் கோரிய நிருபங்களைப் படித்தபின்பு இதனைப் படிக்கிறேன்" என்று கூறிவிட்டுச் சீசர் அத்தாணிமண்டபத்தை நோக்கிநடந்தனர். ஆங்கு, சிம்பர் என்பவன் முற்பட்டுவந்து முழந்தாட்படியிட்டுநின்று, "மஹௌதாரிய மஹாப்பிரபுவே! ஏழையேனது விண்ணப்பத்துக்கிரங்கி ஏழையேனது சகோதரனை மன்னித்தருளவேண்டும் என வேண்டிநின்றனன்.

சீசர்:

" தாழ்ந்து மென்மொழி யுரைத்திடேல் தரணியிற் பணிந்து
வீழ்ந்து நைபவர் பொய்யுரைக் கிரங்கிய வீணர்
சூழ்ந்து செய்தன துடைத்துப்பின் சோர்வினை யடைவார்
ஆழ்ந்து செய்வன செய்யும்யா னவர்நெறி யணையேன்."

"அண்ண லீர்மையேன் பிழைசெயே னணுவள வேனும்
நண்ணு நீதியிற் பிரிந்திடேன் நாயெனக் கதறிக்
கண்ணி னீர்மிக நிலத்தினிற் புரள்வதாற் கருதும்
எண்ண முற்றுறு மென்னநீ யெண்ணுவ திழிவே.""

எனக் கூறச் சார்ந்துநின்ற மார்க்கஸ்புரூட்டஸ் சீசரை நோக்கி, "ஐய! நான் இச்சகம்பேசுவோனல்லேன்; தேவரீரது திருக்கரத்தை முத்தமிட்டேன், சிம்பரின் விண்ணப்பத்துக்கிரங்கி அவனது சகோதரனை விடு

தலைசெய்தல்வேண்டும்" என்றனன்; சமீபத்தில் நின்ற காஷியஸ் சீசரை நோக்கி, "மகிமை பொருந்திய சீசரே! மன்னிக்கவேண்டும்! உம்மிரு தாளினையும் பற்றினேன், சிம்பரின் சகோதரனை மன்னிக்கவேண்டுமென்றனன். சீசர் தம்மைச் சூழ்ந்துநின்று விண்ணப்பித்தோரை நோக்கி,

"இரங்குதி ரென்ன விரக்கு நீர்மையர்,
தமைப்பிற ரிரக்கிற் றயைகாட் டுநரே
நும்போல் வேனெனி னும்மொழிக் கிசைவேன்
வானக மிளிரு மீனின மனைத்துந்
தற்சூழ்ந் தசையத் தானசை வின்றி
நிலைபெறு துருவ னிலைமைகண் டிலிரோ
வான்மீ னனையர் மாநில மாந்தர்
துருவ னனைய னொருவனீண் டுளனல்
அவன்றான் யானென வறிகுவிர் புகன்ற
மொழியிற் பிரியேன் பழியொடு படரேன்
மலைவீழ் வெய்தினு மனம்வீழ் விலனே."

எனக் கூறினார். இதனைக்கேட்ட புரூட்டஸ்ஆதியோர் சீசரது பெருமிதவுரையைத் தற்பெருமையுரை யென வெண்ணி உடைவாளைக் கழற்றி அனைவரும் ஏகோபித்துச் சீசரை வெட்டினார்கள்; "நீயுமா புரூட்டஸ்?" என்னு முரையோடு சீசர் வீழ்ந்து மரணித்தனர். சீசரினது மரணங் காரணமாக ரோமாபுரியிற் கலக மேற்பட்டதும், புரூட்டஸின் முன்னிலையிற் சீசருடைய ஆவி தோற்றிப் பிலிப்பி நகரில் நின்னைப் பின்பும் சந்திப்பேன்" என்று சொல்லுவதும், சீசரது நண்பனாகிய மார்க்அந்தனியும் மருகனாகிய ஒக்டேவியசும் படையெடுத்துவருவதும், அன்னார் காஷியஸ் முதலினோரை எதிர்த்துக் கொல்லுவதும், புரூட்டஸ் சீசரைக் கொன்றது தவறென அறிந்து தற்கொலைசெய்துகொள்வதும் பிறவும் வந்து சரிதை முடிவுறும்.

அ. ரோமாபுரியில் நடந்த மற்றொருசரிதையாகிய சேனாபதி சரிதை வெகுளிச்சுவைக்கு எடுத்துக்காட்டாக அமைந்துநின்றது. ரோமாபுரியை யரசாண்ட சக்கரவர்த்தி யிறந்துபோக அவனது புதல்வராகிய சற்றேணினஸ், பசியானஸ் என்போர் தம்முண் முரணிச் சண்டையிட்டுக்கொண்டுநின்றனர். தைதஸ் அண்டிரணிக்கஸ் என்

னுஞ் சேனைத்தலைவன் சக்கரவர்த்தியின்புதல்வ ரிருவருள் மூத்தோ
னாகிய சற்றேணினசுக்கே பட்டம் உரியதெனத் தீர்ப்பிட்டனன்.
சேனைத்தலைவனாகிய தைதஸ் (அண்டிறணிக்கஸ்) பல தேயங்களை வெற்றி
பெற்றுவந்தவனாதலால் அவனுக்கு நிறைந்த செல்வாக்கிருந்தது. ஆத
லினால் அவன் சொல்லுக் கியைந்து ஜனங்கள் சற்றேணினஸைச் சக்கர
வர்த்தியாக்கினர். தைதஸ் பிற தேயங்களிலிருந்து கொண்டுவந்த
சிறைகளுள் தமோரா எனப் பெயரிய வேற்றுநாட்டரசியொருத்தி யிருந்
தனள்; சற்றேணினஸ்மன்னன் இவளது அழகி லீடுபட்டு இவளைத்
தனது காதற்கிழத்தியாக்குதற்கு மனம்வைத்திருந்தனன். தமோரா
தனது ஏவலாளனாகிய ஆரோன்மீது பொருந்தாக்காதல் வைத்திருந்
தாள்; இதனைப் பிறரறியார். தமோராவைக் காதற்கிழத்தியாகவும்
சேனைத்தலைவனது புதல்வியாகிய லவீனியாவைப் பட்டத்தரசியாகவும்
ஆக்குதற்கு விரும்பிய சற்றேணினஸ்மன்னன் தைதஸை அழைத்து
அவனது விருப்பத்தை விசாரித்தான். தைதஸ் அரசர்வாக்குக்கு எதிர்
வாக்கில்லையெனக் கூறி உடன்பட்டான். தைதஸினுடைய புதல்வருள்
ஒருவனாகிய மூதியஸ் என்பவன் முற்பட்டு லவீனியாவை இளமன்ன
னாகிய பசியானசுக்குக் கொடுப்பதாக முன்னமே வாக்குப்பண்ணியபடி
யால், சற்றேணினசுக்குக் கொடுக்கநினைப்பது தவறென்று தடுத்து
நின்றனன். “மன்னன்வாக்குக்கு எதிர்வாக்குக்கூறிய பேதாய்!
உன்னை வாளினால் மாய்க்கிறே” னென்று கூறித் தைதஸ் தனது மைந்த
னாகிய மூதியஸை வாளினால் எறிந்து வீழ்த்தினான். சற்றேணினஸ்
இதுவே தருணமென் றெண்ணித் தைதஸை நோக்கி “நீ நின்மகளைப்
பசியானசுக்குக் கொடுத்து அதனால் வருகின்ற நன்மையைப் பெறுதி;
நான் தமோராவைப் பட்டத்தரசியாக்குகிறேன்” என்று கூறித்
தமோராவைப் பட்டத்தரசியாக்கினன். தமோரா தன் மைந்தராகிய
டெமத்திரியஸ், கிரன் என்பாரையுந் தன்னையுஞ் சிறைப்படுத்திவந்த
தைதஸின்மேல் இயல்பாகவே வன்மங்கொண்டிருந்தாளாதலினால் பழி
வாங்குவதற்கு எப்பொழுது தருணம்வாய்க்குமென்று காத்துக்கொண்
டிருந்தனள். ஒருநாள் உபவனத்திலே தமோராவும் ஆரோனும் இன்
புற்றிருக்கும்போது அவ்வழியே லவீனியாவும் அவளது நாயகனாகிய
பசியானசும் வந்தனர். அவரைக் கண்டமாத்திரத்தே ஆரோன் அகன்று
விட்டான். தாங் கண்ட செய்தியை மன்னனுக்குரைப்பதாகச் சொல்லி

லவீனியாவும் பசியானசும் அகன்றுவிடச் சிறிதுநேரத்துக்குள் தமோராவின்புதல்வ ரிருவரும் அவ்வழியே வந்து தமது தாய் சஞ்சலித்திருப்பதைக்கண்டு எய்திய தென்னவென விசாரித்தனர். தமோரா பசியானஸ் தன்னை இகழ்ந்ததாகக் கூறி அவனைக் கொன்றுவிடும் படி புதல்வரை யேவினள். தமோராவின்புதல்வர் ஆயுதமில்லாதுநின்ற பசியானஸைக் கொன்று ஒரு குப்பைக்கிடங்கினுட் போட்டுவிட்டு லவீனியாவை வலிதிற் கற்பழித்துக் காரியம் வெளிப்பட்டுவிடு மென்றஞ்சி அவளது நாவையும் கைகளையும் வெட்டிவிட்டுப்போயினர். ஆரோன் ஒரு பொய்ந்நிருபத்தை யெழுதிப் பசியானஸின் உடல் கிடந்த கிடங்கினுட் போட்டனன். இதனைக் கண்டெடுத்த மன்னன் நிருபத்தி லெழுதியிருந்த வாசகங்களை நம்பித் தைதஸினுடைய புதல்வராகிய குவிந்தஸ், மார்ஷியஸ் என்போர் இளமன்னனைக் கொன்றனரென நிச்சயித்து அவரிருவரையுஞ் சிறைச்சாலையி லிடுவித்தான். தனது புதல்வ ரிருவரையுஞ் சிறையினின்று நீக்குவதற்குப் பெரிதும் முயன்றுகொண் டிருந்த தைதஸினிடம் ஆரோன் வந்து மைந்த ரிருவருடைய உயிருக்கும் பதிலாகத் தந்தையினுடைய வலக்கரத்தைக்கொடுத்தால் மன்னன் மைந்தரிருவரையும் விடுதலையாக்கிவிட வாக்குப்பண்ணியிருப்பதாகப் பொய்ம்மொழி கூறினான். தைதஸ் இயைந்து தன் வலக்கரத்தைநீட்ட ஆரோன் அதனை வெட்டியெடுத்துக்கொண்டேகினன். லவீனியாவைக் காட்டிற் கண்ட அவளது சிறியதந்தையாகிய மார்க்கஸ் அவளது வேறுபாட்டைப் பார்த்து அவலித்து அதனைச் செய்தார் யாவரென விசாரித்தனன். நாவெட்டுண்டிருந்த லவீனியா வாயில் ஒரு எழுதுகோலைப் பற்றி நடந்த செய்திகளை எழுதிக்காட்டினள். இதனை யறிந்த தைதஸ் அடங்கா வெகுளிகொண்டு தனது வலக்கரம்போயினமைக்காக அவலித்தானாயினும் மன்னனையும் தமோராவையும் அவளுடைய புதல்வ ரிருவரையும் அதஞ்செய்கின்றேனென் றார்ப்பரித்தெழுந்தனன். அவனது மூத்தபுதல்வனாகிய லூசியஸ் தந்தையை யமர்த்தி வேண்டியவற்றைத் தான் செய்து முடிப்பதாகக்கூறி வேற்றுநாட்டுக்குச்சென்று சேனை திரட்டிக்கொண்டுவந்து ரோமாபுரியை முற்றுகையிட்டான். சற்றேர்ணினஸ் அவனைப் பேதித்துவெல்லுதல்கூடாதெனவறிந்து சாமோபாயத்தினால் வெல்லக்கருதித் தான் விருந்துண்ணவருவதாகவும் லூசியஸையும் விருந்துண்ண அழைக்கும்படியாகவும் தைதசுக்குச் செய்தியனுப்பினான்.

இச் செய்திகொண்டுவந்த தமோராவின்புதல்வ ரிருவரையும் தைதஸ் தன திடக்கையிலேந்திய வாளுக் கிரையாக்கி அவருடலத்தை மறைத்து வைத்துவிட்டு மன்னனையும் தமோராவையும் விருந்துண்ண அழைத்து வரும்படி ஆளனுப்பினன். தமோரா ஒரு மகவினை யீன்று அது ஆரோனைப்போலக் கறுத்தமேனியோடிருந்தமையினால் மகவைப் பிறர்காணில் ஐயுறுவாரென் றஞ்சி ஒரு சேடிகைக்கொடுத்து அதனைக் கொன்றெறிந்து விடும்படி யனுப்பினள். ஆரோன் இதனை யறிந்து சேடியைக் கொன்று விட்டுச் சிசுவைக் கையிலெடுத்துக்கொண்டுபோம்பொழுது லூசியஸி னுடைய போர்வீரர் சிலர் அவனை யெதிர்த்துக் கைதியாக்கினர். அவன் வாய்மொழியினின்று அனைத்தினையும் அறிந்த லூசியஸ் தமோராவி னுடைய சிசுவையும் எடுத்துக்கொண்டு தந்தையினுடைய மனைக்கு வந்தனன். ஆங்கு முன்னமே விருந்துண்ணவந்த தமோராவின்முன் தைதஸ் அவளது புதல்வரது தசையைச் சமைத்த ஊனுணவை வைத்தான். அவள் உண்டுகொண்டிருக்கும்போது லூசியஸ் சிசுவோடு வந்து சேர்ந்தனன். தைதஸ் பெருவெகுளியோடுவந்து நடந்த விருத்தாந்தங் களையெல்லாஞ் சொல்லி மானமிழந்தபின்பு தன்மகள் லவீனியா உயிர் வாழ்தல் தகுதியன்றெனா அவளைத் தன் கைவாளுக் கிரையாக்கி இவற் றுக்கெல்லாங் காரணமாகிய தமோராவையும் கொன்றுவிட்டான். அரசன் வெகுண்டெழுந்து தைதஸைக்கொல்லப் பக்கத்தில்நின்ற லூசியஸ் மன்னனுயிரைத் தன் கைவாளுக் கிரையாக்கினன். நடந்த வர்த்தமானங் களையெல்லாம் ஜனங்களுக்குத் தெளிவுறக்கூற ஜனங்கள் திரண்டு ஆரோன் என்னுங் கொடியோனைப் பிடித்து அவனது தலை புறத்தே யிருக்கும்படி நிலத்திற் புதைத்து உணவின்றி யிறக்கும்படிவிடுவதோடு சரிதை முடிகின்றது. இச்சரிதையினுள் உறுப்பறை, குடிகோள், அலை, கொலை யென்னும் நான்கும்பற்றியெழுந்த வெறுப்பொடுகூடிய வெகுளிச் சுவை தோன்றினமை காண்க.

௬. இனி, உவகைச்சுவைக்கு இலக்கியமாகிய வேனிற்காதையை ஆராயப்புகுவாம். செகசிற்பியார் இந்நாடகத்தை யெழுதிமுடிக்க அதனைப் படித்த அவரது நண்பர், "ஐய! இந்நாடகத்துக்குப் பெயரென்ன!" என விசாரித்தனர். "நீவிர் விரும்பியபடி "யெனக் கவிவாணர் விடையளித்தனர். அவ்வுரைத்தொடரே பெயராக இந்நாடகம் வழங்குவ

தாயிற்று. இது பநியிகந்து வனத்தில் வதிந்த இளையோர் வேனிலான் வயப்பட்டுப் பிரிவாற்றுமையாற் றுன்புறுவதையும் பின்னர்க் கூட்டத்தினுல் இன்புறுவதையும் நிகழ்ச்சியாகக்கொண்டதாதலின் இதனை யாம் வேனிற்காதை யென வழங்குவாம். பலவளம் நிறைந்த பாண்டிநாட்டினையும் அதற்கணித்தாகிய ஆரணியத்தையும் கதை நிகழ்ந்த இடங்களாகக் கொள்வாம்.

நீதிநெறி தவருது அரசுபுரிந்த குலசேகரபாண்டியனை அவனது இளவலாகிய வீரேந்திரபாண்டியன் வஞ்சனையினுற், காட்டுக்குத்துரத்திவிட்டு அவனது இராஜ்யத்தைக் கைப்பற்றி அரசுபுரிந்துவந்தனன். அரசிழந்த குலசேகரனும் ஜயதேவன் அமலதேவனென்னும் பிரபுக்களும் பிறரும் ஆரணியத்திற்சென்று லௌகிகக்கவலையற்றுச் சந்தோஷமாகத் தமது வாழ்நாட்களைக் கழித்துவருவாராயினுர். குலசேகரனதுபுதல்வி கோகிலவல்லியும் வீரேந்திரனதுபுதல்வி கேகயவல்லியும் உடன்பிறந்து உடன்வளர்ந்தவராதலினுல் நட்புமிக்கிருந்தனர். கோகிலவல்லியினது பிரிவைத் தன்மகள் சகிக்கலாற்றுது துன்புறுவாளென அறிந்த வீரேந்திரன் தமையன்புதல்வியை யவளது தந்தையொடு போகவொட்டாது தடுத்து அரமனையி லிருத்திவைத்திருந்தான்.

ஒருநாள் வீரேந்திரனும் சுற்றத்தாரும் மந்திரி பிரதானியருங் குழுமியிருந்த போவையிலே யொரு மற்போர் நிகழ்ந்தது. சமஸ்தானத்துமல்லனுகிய சார்த்தூலன் என்பான் புயங்களைத் தட்டி யார்ப்பரித்துத் தன்னேடு பொரவல்லார் யாவரேனு முளரோவென அறைகூவி நின்றதருணத்தில், வயதில் இளையோனும் திடகாத்திரதேகமுடையோனுமாகிய இரதிகாந்தனென்னும் வாலிபன் முற்பட்டுவந்து மற்போர்புரிந்து சார்த்தூலனை விழுத்தினுன். வீரேந்திரன் தனது மல்லனைத் தோற்கச்செய்த வாலிபனைநோக்கி "இளையோய்! நின்பெயரென்ன" என வினவினுன்.

இரதிகாந்தன் : ஐய! நான் இராகவதேவன் என்னும் பிரபுவின் புதல்வன்; என்பெயர் இரதிகாந்தன்.

வீரேந்திரன் : வேறு யாவருக்கேனும் நீ புதல்வனுயிருந்திருந்தால் நன்றுயிருக்கும். இராகவதேவனை உலகம் புகழ்ந்துரைக்கின்ற

தெனினும் எனக்கும் அவருக்கும் நீங்காப்பகைமை யுண்டு. வலிமையின்மிக்க வாலிபனே! போய்வருவாயாக; நீ வேறு யாரையாவது நினது தந்தையென வுரைத்திருப்பாயாயின் என் உள்ளம் மகிழ்வெய்தியிருக்கும்.

[வீரேந்திரனும் பரிசனரும் போய்விடுகின்றனர்.]

கேகயவல்லி : கோகிலா ! எந்தையினுடையஸ்தானத்தில் நான் இருந்திருப்பின் இவ்வண்ணம் செய்வேனு ?

இரதிகாந்தன் : நான் இராகவதேவனது கனிஷ்டபுத்திரனுயிருப்பதைப் பெறற்கரும் பெருமையாகக் கொள்ளுகிறேன். வீரேந்திரனது பட்டத்தைப் பெறுவதெனினும் பிறிதொருதந்தையை விரும்பேன்.

கோகிலவல்லி : இராகவதேவர் எனது தந்தைக்கு நண்பர். இந்த இளவீரர் அவரது புதல்வரென்பதை நான் முன்னமே யறிந்திருந்தேனுயின் என் கண்ணீர் இவரை மற்போர்புரியவொட்டாது தடுத்திருக்கும்.

கேகயவல்லி : வாராய் கோகிலை ! நாம் இவ்வீரரையணுகி யாறுதல் வார்த்தை கூறுவோம். எந்தையினுடைய கொடுஞ்செயல் என் உள்ளத்திற் றைக்கிறது.

[இருவரும் இரதிகாந்தனை யணுகுகின்றனர்.]

ஐய! நீர் வெற்றியுடையீர் ; தகவுடையீர் ; இன்றுபோலவே என்றும் நிலையிற்பிரியாதிருப்பீராயின் நீர் மணமுடிக்குங் காதலி மனப்பாக்கியமுடையவளே.

கோகிலவல்லி : (தன் கழுத்திற்கிடந்த முத்துமாலையைக் கழற்றி இரதிகாந்தன்கையிற் கொடுத்து) ஐய! என்பொருட்டு இதனை யணிந்துகொள்வீராக. இதனினும்பார்க்கப் பெரியதொரு வெகுமதியைக் கொடுக்க என்னுள்ளம் விரும்புகிறது ; கையிலோ பிறிதொன்றில்லை. கேகயா! நாம் போய்வருவோமா ?

[பெண்க ளிருவரும் போய்விடுகின்றனர்.]

இரதிகாந்தன் : (தன்னுள்ளே) ஏதேது! ஒருவார்த்தை மொழியவும் நாவெழவில்லையே; இரதிகாந்தா! சார்த்தூலனை வென்றேனெனப் பெருமிதங்கொள்ளாதே; ஒரு மடவாலது கண்ணிணைக்கு நீ தோற்றுவிட்டனை.

[இரதிகாந்தன் கோகிலவல்லிமீது காதல்கொண்டானென்பதை நாம் சொல்லவேண்டுவதில்லை.]

கோகிலவல்லி முத்தாரங் கொடுத்த செய்தியைக் கேள்வியுற்ற வீரேந்திரன் அவள்மேற் சினந்து, "தந்தையிருக்குமிடந்தேடிப்போ" எனக் கூறி அவளை அரமனையிலிருந்து துரத்திவிட்டான். அவளது பிரிவைச் சகிக்கலாற்றாத கேகயவல்லி தந்தையறியாவண்ணம் சல்லாபனென்னும் ஒரு சேவகனையு மழைத்துக்கொண்டு கோகிலவல்லியுடன் போயினள். வாயில்காப்பாளர்முதலியோர் காணின் ஏதம்வருமென் றஞ்சிக் கோகிலவல்லி ஆண்பிள்ளைவேடந் தரித்துக்கொள்ளக் கேகய வல்லி ஆயர்மகளாக வேற்றுருக்கொண்டு குலசேகரன் வசிக்கும் ஆரணியத்தை யடைந்து அங்கு ஒரு குடிசையை யமைத்துக்கொண்டு வாழ்ந்து வந்தனர். இரதிகாந்தனுடைய வீரச்செயலைக் கேள்வியுற்ற அவனது மூத்தோனாகிய நீலாம்பரன் அழுக்காறுற்று இரதிகாந்தனுக்குக் கேடு செய்ய எண்ணமுற்றிருந்தனன். இதனையறிந்த ஆதன் என்னும் வயோதிக வேலைக்காரன் இரதிகாந்தனுக்குத் தெரிவிக்க அவனும் தமையனது கண்முன்னின்று அகன்றுவிடக் கருதிக் குலசேகரன் வசிக்கும் ஆரண்யத்தைநோக்கி நடந்தனன்; ஆதனும் உடன்சென்றனன். இருவரும் ஆரண்யத்தையடைந்தனர். பசி தாகத்தினாற் களைப்படைந்த ஆதன் சோர்ந்து விழ இரதிகாந்தன் அவனுக்கு உணவுதேடிவரும்பொருட்டாக ஆரண்யத்தினுள் அலைவுற்றுவருமபோது உண்ணுதற்கு ஆயத்தஞ் செய்துகொண்டிருந்த குலசேகரனையும் நண்பரையுங் கண்டனன். இரதிகாந்தன் உடைவாளை யுருவி, அன்னாரை நோக்கி "உண்ணன்மின்; உணவின்றித் தவிக்கின்ற எனது நண்பனொருவனுளன், அவனது பசிதீர்த்த பின்பன்றி நீவிர் உண்ணுதல் கூடாது" என்றனன். குலசேகரனாதியோர் நகைத்து "இங்கு உனக்கும் உனது நண்பனுக்கும வேண்டிய அளவு உணவு உண்டு; வாளை யுறையிற்போடுதி" என்றனர். இரதிகாந்தன் ஆதனை யழைத்துவந்து உணவூட்டியபின் ஒருவரையொருவர் விசாரித்

தறிந்து அனைவரும் அளவளாவி யின்புற்றனர். குலசேகரன் நிகழ்ந்தன வெல்லாவற்றையுஞ் சிந்தித்து, ஜயதேவனை நோக்கி, "இவ்வுலகம் நாடக வரங்குபோன்றதன்றோ! நாம் நடிக்கும்பாகத்தினும்பார்க்கத் துன்பம் மிக்க பாகத்தை நடிப்பார் பிறருளரல்லவோ?" என்றனன்.

[ஜயதேவன் இதற்கு மறுமொழியாக "அங்கணுலகனைத்தினையும்" எனத் தொடங்கிக் கூறிய செய்யுட்களை முகவுரையினுட் டந்தனம்; ஆண்டுக் காண்க.]

இரதிகாந்தன் குலசேகரனாதியோரோடு வனத்தில் வசிக்கின்றநாட்களில் இளவேனிற்காலம் வருதலும் கோகிலவல்லியை நினைத்துத் துன்புற்று அவள்மேல் ஒரு பாசுரத்தை யெழுதி மரத்திற் றொங்கவிட்டான். அவ்வழியே வந்த கோகிலவல்லி பாசுரத்தைக் கண்டெடுத்து ஆலோசனையுற்றிருக்கும்போது அவளது சேவகனும் விதூஷகனுமாகிய சல்லாபன் எதிர்ப்பட்டுப் பல நகைக்குறிப்புமொழிகளைக் கூறுகிறான். அவன் போய்விட இரதிகாந்தன் அவ்வழியே வருகிறான். கோகிலவல்லி ஆண்பிள்ளைவேடத்தோ டிருந்தாளாதலினால் இரதிகாந்தன அவளை இன்னாளென் றறிந்துகொள்ளவில்லை. கோகிலவல்லியோ அவனை இன்னானென்று உடனே யறிந்துகொண்டு அவனைநோக்கி "வனசரா! நாழிகை யென்ன" என்றனள்.

இரதிகாந்தன்: நேர மென்னவென்றுகேட்டல் மரபாகும்; வனத்தில் நாழிகைவட்டியிருப்பினன்றோ நாழிகை யெதுவென்று கேட்டல் பொருத்தமான கேள்வியாகும்.

கோகிலவல்லி: அங்ஙனமாயின் வனத்தில் உண்மைக்காதலரு மிலர். விநாடிதோறும் நெடுமூச்செறிந்து நாழிகைதோறும் ஏக்கமுற்றிரங்குவது காதலர்க்கு இயல்பாதலின் அன்னார் நாழிகைவட்டியின் உதவியின்றியே மெல்லென்றசையும் நேரத்தின்கதியைச் செவ்வனே யுணர்ந்துகொள்வர்.

[நேரத்தின்கதியைப்பற்றி இருவருஞ் சிறிதுநேரஞ் சம்பாஷிக்கின்றனர்.]

இர: எழில்மிக்க இளைஞனே! நீ வசிக்குமிட மெதுவோ?

கோகி : எனது தங்கையாகிய இவ்வாயர்மகளும் யானும் இவ்வாரண்யத்தின்சாரலிற்றான் வசிக்கின்றோம்.

இர : நீவிர் இவ்விடத்துக்கே உரியவரா?

கோகி : அதோ நிற்கும் குறுமுயல் தான் தோன்றியவிடத்து வசிப்பது போல நாங்களும் இங்கு வசிக்கின்றோம்.

இர : நினது செம்மொழியும் உரைவன்மையும் இக் காட்டுப்புறத்திற் குரியனவல்ல.

கோகி: இங்ஙனம் பலர்சொல்லக் கேட்டிருக்கின்றேன். என் சிறிய தந்தை யொருவருளர்; அவர் இராஜமாநகரத்திற் பலகாலம் வசித்தவர். அவர் எனக்குப் பலவிஷயங்களைத் தெரிவித்திருக்கிறார். அம்மம்ம! நகரத்துப் பெண்களைப்பற்றி யவர் சொன்ன குறிப்பை யெல்லாங் கேட்டேன். பெண்ஜன்மம் எவ்வளவு சீர்கெட்டஜன்மம்; என்னைப் பெண்ணாகப் படைக்காதுவிட்டமைக்காக நான் ஈசுவரனுக்குத் துதிசெலுத்துகின்றேன்.

இர: பெண்கள்பால் அவர் சார்த்திக்கூறிய பிரதானகுற்றங்கள் நினைவிலிருப்பவாயின், தயைசெய்து தெரிவிப்பாய்.

கோகி: பிரதானகுற்றமென் றொன் றில்லை; ஒன்றினைப்போலவே மற்றதும்; ஒன்றினைப் பெரிதென்று சிந்தித்துக்கொண்டிருக்குங்கால், அதன்பின் வருவது அதனினும் பெரிதாகத் தோற்றக் கண்டேன்.

இர: அவற்றினுட் சிலவற்றைச் சொல்லுவாயாக.

கோகி: வியாதியில்லாதவரிடத்து நான் மருந்தை வீணாக்கப்போவதில்லை. இவ்வாரண்யத்தில் யாரோ ஒரு மனிதன் இளமரங்கள் பலவற்றிற் "கோகிலவல்லி" யென்னும் பெயரைப் பொறித்து அம்மரங்களைக் கெடுத்தும், பாசுரங்களை யெழுதிக் கொடிகளிலும், செடிகளிலும் தொங்கவிட்டுக்கொண்டுந் திரிகின்றான். இம் மனிதனை யான் காண்பேனாயின், பெண்களியல்லைப்பற்றி யவனுக்குச் சில கூறிச் சிறிது நற்புத்தி புகட்டுவேன்.

இர: காதலால் அலைகின்ற அம்மனிதன் நானே. தயைசெய்து நினது மருந்தை யளிப்பாய்.

கோகி: என் சிறியதந்தை காதலா லிலேவோருக்கு உரியவென எடுத்துக் கூறிய அடையாளங்க ளொன்றேனும் உம்மிடத்திற் காணப்படவில்லே; ஆதலால் நீர் அக்கூட்டில் அடைபட்டவரல்லர்.

இர: அவ்வடையாளங்கள்தாம் யாவையோ?

கோகி: மெலிந்த முகம், அஃது உம்மிடத்தி லில்லே; உட்குழிந்து நிறம் வேறுபட்ட கண், அஃது உம்மிடத்தி லில்லே; சோர்ந்துபட்ட மன நிலே, அஃது உம்மிடத்திலில்லே.

[இன்னும் பலவற்றைக் கூறுகிருள்]

இர: அழகின்மிக்க இளேஞனே! நீ என்வார்த்தையை நம்பவேண்டுமென்று விரும்புகிறேன்.

கோகி: நம்புவதாவது? தயைசெய்து உண்மையைக்கூறுவீர். "கோகிலவல்லி"யை வியந்து கூறும் பாசுரங்களே யியற்றிக்கொண்டு திரிபவர் நீர்தானே?

இர: ஆம்; நான்தான்.

கோகி: நுமது சந்தப்பாக்களி லெழுதப்பட்டிருக்கின்ற அவ்வளவு அழமானதா நும்முடைய காதல்?

இர: எனது காதல் சந்தத்துக்கு மெட்டாதது, சிந்தித்தற்கு மெட்டாதது.

கோகி: நல்லது நான் மருந்துசொல்லுகிறேன் கேட்பீராக; நீர் என்னைக் கோகிலவல்லியென்று எண்ணிக்கொள்ளவேண்டும்; அவளோடு வார்த்தையாடுவதுபோல என்னோடு வார்த்தையாடவேண்டும்.

[இன்னும் பலவாருகச் சொல்லி இரதிகாந்தனேத் தன்னிருப்பிடத்துக்கு அழைத்துச்சென்றனள். அன்றுமுதல் இரதிகாந்தன் கோகிலவல்லியைத் தினந்தோறும் போய்ப் பார்த்து அவளோடு வார்த்தையாடிவிட்டுவருவா னெனினும், அவளே இன்னுளென் றறிந்து கொள்ளாது, காந்தம னெனப் பெயரிய இளேஞனெனவே யெண்ணி யிருந்தான்.]

கோகிலவல்லி வசித்த குடிசைக்குச் சமீபத்திலே பாவையென்பாள் ஒரு இடையர்குலத்து இளமங்கை வசித்தாள். சீதரனென்பா னொரு ஆயர்மகன் அவளைக் காதலித்து கடைக்கணோக்கம் வைக்கும்படி குறையிரந்துவேண்டிக்கொண்டு திரிந்தான். பாவை கோகிலவல்லியைக் கண்டநாள்முதல் ஆண்பிள்ளையெனநினைத்துக் காந்தமனைக் கண்ட கண் பிறரொருவரையும் பாராதெனக் கூறிச் சீதரனை வெறுத்தொதுக்கி விட்டாள். இதனை யறிந்த கோகிலவல்லி பாவைபொருட்டாகவும் இரதிகாந்தன்பொருட்டாகவும் தனது உண்மைக்கோலத்தை வெளிப் படுத்துதற் குரிய தினம் என்று வருமென்று மனத்திற் சிந்தித்துப் பாவையைநோக்கி "ஏடி மூடமதி யுடையவளே! நான் உன்னை மணக்கப் போவதில்லை; உன் வீணெண்ணங்களை விட்டுவிட்டு உன்னைக் காதலிக் கின்ற ஆயர்மகனை மணந்துகொள்" எனக் கூறினள்.

இந்நிகழ்ச்சிகள் இவ்வாறாக, இராஜமாநகரத்திலே வீரேந்திரன் நீலாம்பரனை யழைத்து, "நினது தம்பி இரதிகாந்தனை என்முன்னிலைக்கு வருவிப்பாயாக" என்று கட்டளையிட்டனன். நீலாம் பரன், "என்தம்பி யிருக்குமிடத்தை நானறியே" னென்றனன். நீலாம் பரன் இரதிகாந்தனை மறைவிடத்திருத்திவிட்டுப் பொய்ம்மொழி கூறுகிறா னென்றெண்ணிய வீரேந்திரன், அவனை நோக்கி, "இன்றே என் நாட்டைவிட்டுப் போய்விடுதி; ஓராண்டெல்லையினுள் நினது தம்பி யொடு வாராதுபோவாயேல் நீ இவ்விடந் திரும்பிவரவேண்டியதில்லை; உன்பொருளெல்லாம் என் பொக்கிஷத்தைச் சேரு" மென்றனன். நீலாம் பரன் துன்புற்றுக் குலசேகரன் வசிக்கும் ஆரணியத்தைநோக்கி நடந்த னன். ஆங்குச் சென்ற நீலாம்பரன் வழிநடையினாற் சோர்ந்து ஒரு மாநிழலி லுறங்கும்போது அவன்பக்கம் ஒரு விஷசர்ப்பம் படமெடுத்துக் கொண்டுநின்றது; ஒரு பெண்சிங்கம் அவன் துயிலொழித் தெழும் வேளை யிது வென்று பார்த்துக்கொண்டிருந்தது; அவ்வழி வந்த இரதிகாந்தன், தமையன் தனக்குக் கேடுசூழ்ந்தானென்பதையும் நினை யாது தன் னுயிரையும் பொருட்படுத்தாது சிங்கத்தோடு பொருது நீலாம்பரனது உயிரைக் காப்பாற்றினான். துயிலொழிந் தெழுந்த நீலாம்பரன் தன் தம்பியினது பெருந்தகைமையை யுணர்ந்து அளவளாவி முன்னாளில் தான் அவனுக்குக் கேடுசூழ்ந்தமையைப் பொறுத்தருளும்

படி வேண்டினன். சிங்கத்தின் நகம் பட்ட காயத்தினுற் சிறிது துன்புற்ற இரதிகாந்தன் அன்று கோகிலவல்லியின்மனைக்குத் தான் போகக்கூடாமையினுல், செய்தி தெரிவித்துவரும்படி தமையனுகிய நீலாம்பரனை யனுப்பினுன். நிகழ்ந்தவற்றையெல்லாம் நீலாம்பரன் உரைக்க அவன்மொழியைக் கேட்டுக்கொண்டிருந்த கேகயவல்லி அவன் பாற் காதலுற்றனள். சல்லாப னென்னும் விதூஷகன் ஆயர்மகளாகிய ஆதிரையைக் காதலித்தனன். ஒரு சுபதினத்திலே நீலாம்பரனுக்கும் கேகயவல்லிக்கும், சீதரனுக்கும் பாவைக்கும், சல்லாபனுக்கும் ஆதிரைக் கும்மணவினைநடத்துவதாகநிச்சயஞ்செய்யப்பட்டது.(காந்தமணவேடத் தோடிருந்த) கோகிலவல்லி இரதிகாந்தனை நோக்கி, "நாளைத்தினத்தில் மணமுடிப்பதற்கு நீயும் ஆயத்தமாயிரு, உனதுகாதலியை இவ்விடம் வரப்பண்ணுகிறே" னென்றனள். மறுநாள் கோகிலவல்லி சொந்த உடையணிந்துவந்து தந்தையாகிய குலசேகரனை வணங்கிநின்றனள். அவனும் மனமகிழ்ந்து அவள்கையைப் பற்றி இரதிகாந்தனது கையில் வைத்தனன், நான்கு மணச்சடங்குகளும் நிறைவேறி அனைவரும் இன்புற்றிருக்கும்போது வீரேந்திரன் ஒரு சந்நியாசியாரின் நற்போதனை யினுற் றுறவுபூண்டுவிட்டானெனவும், இராஜ்யம் குலசேகரனுக் காயிற்று எனவும் ஒரு செய்தி வந்தது. அனைவரும் மகிழ்ச்சியெய்தினர்; ஜய தேவன்மாத்திரம் ஆரண்யத்தைவிட் டகலும்விருப்பம் அற்றவனு யிருந்தான்.

[இவ்வளவோடு சரிதம் முடிகின்றது.]

௧௰. கூதிர்க்காதையினது கதைச்சுருக்கம் வருமாறு:—

உஞ்சையம்பதியை யரசுபுரிந்துவந்த ஆகண்டல னென்னும் மன்ன னும் போகவதிக்கு இறையாகிய பதுமநாப னென்னும் மன்னனும் சிறு வயதுதொடக்கம் இணையில்லாநட்புப்பூண்டிருந்தனர். கேண்மையினுல் உளங் கவர்வுற்று உஞ்சையம்பதிக்கு வந்த பதுமநாபன் தனது ராஜ் யத்தை மறந்து ஒன்பதுமாதம் உஞ்சையிலே நின்றுவிட்டான். நாள் பல கழிந்ததென வுணர்ந்த பதுமநாபன் போகவதிக்குப் போக நினைக்க, ஆகண்டலன் முற்பட்டு இன்னும் ஒருவாரம் நின்று போகலாமே யென்ற னன். பதுமநாபன் இசையவில்லை. பின்பு ஆகண்டலனுடைய மனைவி அயிராணி பரிந்துவேண்டப் பதுமநாபன் பின்னும் ஒருவாரம் நிற்ப

தற்கு இயைந்தனன். அயிராணி மகிழ்ந்து பதுமநாபனது கையைப் பற்றி அவனை உவவனத்துக்கு அழைத்துச்சென்றனள். இதனைக் கண்ட ஆகண்டலன் மனைவிமேல் ஐயப்பாடுற்றுப் பதுமநாபன் ஒன்பது மாதம் தரித்துநின்றது அயிராணிபொருட்டே யென்று தன்மனத்தி னுள்ளே நினைத்தனன். சந்தேகம் என்னும் விஷசர்ப்பம் புகுந்தமை யினாலே ஆகண்டலனுடைய உள்ளம் நிலைகலங்கிற்று; கமலவதன னென்னும் மந்திரியை யழைத்துப் போகவதிமன்னனைக் கொன்றுவிடும்படி யாக ஆகண்டலன் தெரிவித்தான். பலவாறுகப் புத்திகூறியும் மன்னன் கேளாமையினாற் கமலவதன னென்னும் மந்திரி பதுமநாபனை யடைந்து நடந்ததைக் கூறிப் போகவதிக்குப் புறப்படும்படிசெய்து தானும் உடன் சென்றனன். பதுமநாபனும் கமலவதனனும் போய்விட்டார்க ளென் றறிந்தவுடனே ஆகண்டலனுடைய உள்ளத்தி லெழுந்த சந்தேகம் உறுதி யாக நிலைபெற்றுவிட்டது. அயிராணி அந்தப்புரத்திற் பாங்கியர் சூழ விருந்து தனது இளமைந்தனாகிய ஐயந்தனை நோக்கி "வாராய்மகனே! ஒருகதைசொல்" என்றனள்.

ஐயந்தன்: சந்தோஷமானகதை சொல்லவா; சோகமானகதைசொல்லவா?

அயிராணி: கூடியஅளவு சந்தோஷகரமாயிருக்கட்டும்

ஐயந்தன்: இப்பொழுது கூதிர்க்காலமானபடியால், சோகம்நிறைந்தகதை நான் சொல்லவேண்டும்.

அயிராணி: நல்லது ஐய! இவ்விடத்தில் என்பக்கம் வந்திருந்து கதை யைச் சொல்வாயாக.

[இத்தருணத்தில் அரசன் மந்திரி பிரதானியரோடு அந்தப்புரத் துக்குவந்து குற்றமற்ற அயிராணியைப் பலவாறுக நிந்தித்து அவள் பதுமநாபனோடு தொடர்புவைத்திருந்தாளென்றும், அவள்வயிற்றிலிருக் குஞ் சிசு பதுமநாபனுக்குரியதென்றும் கூறி அயிராணியைச் சிறையி லிடும்படி கட்டளையிட்டான்.]

சிறைச்சாலையில் அயிராணி ஒரு பெண்மகவை யீன்றனள். அரம்பை யென்னுஞ் சேடி சிசுவை யெடுத்துக்கொண்டு சென்று ஆகண் டலன்முன்னிலையிற் கிடத்த, அவன் சீறி, "இச்சிசு பதுமநாபனுக் குரியது; இதனைக் கொண்டுபோய் மக்கட்சஞ்சாரமில்லாதவிடத்தி லெறிந்துவிட்டுவருவாயாக" என்று அந்தணன் என்னும் மந்திரிக்குக்

கட்டளையிட்டான்; பின்பு தன் மனைவியை இராஜசபைக்கு அழைத்து நிறுத்தி அங்கிருந்த முதியோரை நோக்கி அவளுக்குத் தண்டனை விதிக்கும்படி கேட்டனன். அத்தருணத்தில், சாத்தன்கோயிலினின்று தெய்வ முரைத்த கட்டுரை யெழுதப்பட்ட ஒரு பத்திரத்தை இருவர் சேவகர் கொண்டுவந்து அரசன்முன்னிலையில் வைத்தனர். அப்பத்திரத்தில் "அயிராணி கற்புநெறி தவறாதவள்; பதுமநாபன் குற்றமற்றவன்; கமலநாதன் உண்மையூழியன்; ஆகண்டலன் கொடுங்கோலன்; சிசு அவனுக்கே யுரியது; இறந்துபோனது திரும்பிவாராவிடின் ஆகண்டலனுக்குச் சந்ததியில்லை"யென எழுதப்பட்டிருந்தது. அரசன், சபையோரைநோக்கி, "கட்டுரை பொய், எடுத்தகருமம் நிறைவேறட்டும்" என்றான். அத்தருணத்தில் ஒரு சேவகன் ஓடோடியும்வந்து இராஜகுமாரனாகிய ஜயந்தன் சடுதியிற் சுரங்கண்டு இறந்துவிட்டதாகத் தெரிவித்தான்; இச்சொற் கேட்டவுடனே அயிராணி துன்பத்தினால் மூர்ச்சித்துவிழுந்தனள். மன்னன் பதறி யழுது தன்மனைவி யிறந்துவிட்டதாக நினைத்துத் துன்பத்தி லமிழ்ந்தி ஈமக்கிரியைகளை நடத்துமாறு சொல்லிவிட்டுத் தானுந் தன் கவலையுமாக இருந்துவிட்டான். அயிராணி சிறிதுநேரத்தி லெழுந்து நடந்தகாரியங்களை யறிந்துகொண்டு அரசன் முதலினோர் தான் இறந்துபோய்விட்டதாகவே நினைக்குமாறு சூழ்ச்சி செய்துவிட்டுத் தன் னுயிர்ப்பாங்கியாகிய அரம்பை யொருத்தியன்றிப் பிறரறியாவண்ணம் ஒரு தனிமனையில் வசித்துவந்தனள். சிசுவைக் கொண்டு சென்ற அந்தண னென்னும் மந்திரி கப்பலேறிப்போய்ப் போகவதிநாட்டைச் சேர்ந்து ஒரு காட்டுச்சார்பிலே சிசுவையும் அதன் வரலாறெழுதிய பத்திரத்தையும் ஒரு பொன்முடிப்பையும் வைத்துவிட்டுப் போகிறவழியில் அவனை ஒரு கரடி தாக்கிக் கொன்றுவிட்டது; அவன் ஏறிவந்த கப்பலும் பாறையில் மோதுண்டு உடைந்துபோயிற்று. அந்தக் காட்டுச்சார்பில் ஆடு மேய்த்துக்கொண்டுநின்ற வெள்ளைநாகன் என்னு மிடையன் இவற்றையெல்லாம் தூரத்தில்நின்று கண்டு ஓடோடியும்போய்ச் சிசுவையும் பொன்முடியையும் பத்திரத்தையு மெடுத்துத் தன்மகன் நாகன்சேய் என்பவனையும் உடனழைத்துக்கொண்டு வீடு போய்ச் சேர்ந்தனன். "அன்னை பரிபவமுற்றகாலத்தில் இம்மகவு பிறந்ததாதலின் இதற்குப் பரிபவை யென்று பெயரிடுக" எனப் பத்திரத்தி லெழுதப்பட்டிருந்தபடி வெள்ளைநாகன் தான் கண்டெடுத்த குழந்தைக்குப் பெயரிட்டு வளர்த்துவந்தனன்.

[முகம், பிரதிமுகம், கருப்பமாகிய மூன்றுசந்திகள் இவ்வளவோடு முடிகின்றன.]

மேலே சொல்லப்பட்ட நிகழ்ச்சிகள் நடந்து பதினைந்து ஆண்டுகளாயின. பதுமநாபன்புதல்வனாகிய வசந்தனென்னு மரசிளங்குமரன் வேட்டம்போய் விளையாடும்போது அவன் வளர்த்த இராஜாளிப்பறவையொன்று வெள்ளைநாகன்வீட்டுமுற்றத்திற்போ யிறங்கிற்று. பறவையைத் தேடிச்சென்ற வசந்தன் பரிபவையைக் கண்டு பரவசப்பட்டு அன்றுமுதல் வெள்ளைநாகன்வீட்டுக்கு வருவதும் போவதுமாக இருந்தான். ஒருநாள் கார்விழாக் கொண்டாட்டதினத்தில் வசந்தன் வெள்ளைநாகன்வீட்டுக்குப்போய் ஆங்குப் பரிபவையோடு காதன்மொழியுரைத்துச் சல்லாபித்துக்கொண்டிருக்கும்போது பதுமநாபனும் கமலநாதனும் வேற்றுருவோடு பின்சென்று இளவரசனுடைய காமவொழுக்கத்தைக் கண்டுகொண்டார்கள். அரசனுடைய சீற்றத்துக் கஞ்சிச் செய்வதென்னவென்றறியாது வசந்தன் திகைப்பக் கமலநாதன் அவனை இரகசியமாக அழைத்து, "உன் காதலியையுங் கொண்டு உஞ்சையம்பதிக்குச் செல்லுதி, இந்நிருபத்தை அந்நாட்டு அரசர்வசம் கொடுப்பாயாயின் அவர் உனக்கு ஆகவேண்டுவன செய்வ" ரென்றனன். அரசிளங்குமரன் அட்டோலிக்கன் என்னு மொரு வழிப்போக்கனிடம் தானணிந்திருந்த ஆடையாபரணங்களைக் கொடுத்துவிட்டு அவனது ஆடையைவாங்கியணிந்துகொண்டு பரிபவையையு மறைத்துக்கொண்டு கையிற் கொஞ்சப்பொருளோடு இரகசியமாகக் கப்பலேறிப்போய் உஞ்சையம்பதியையடைந்தனன். கமலநாதன் இராஜகுமாரனை உஞ்சைக்கனுப்பியது தான் உஞ்சைக்குப்போவதற்கு ஒரு வசதியேற்படுத்திக்கொள்ளுவதற்காகவேயன்றிப் பிறிதொன்றிற்கல்லவாதலால் விரைந்து அரசனுக்குக் கருமத்தைத் தெரிவித்து உஞ்சைக்குத் தானும் அரசனும் போவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்தனன். அரசிளங்குமாரனுடைய ஆடை முதலியவற்றை வைத்திருந்த அட்டோலிக்கனைக் காவலாளர் பிடித்துவந்து அரசன்சமுகத்தில் விட அவன் வெள்ளைநாகன்மேலும் நாகன்சேய்மேலுங் குற்றஞ்சுமத்தினன். அரசிளங்குமாரனைத் தேடிப்போதற்குப் புறப்பட்ட மன்னனும் கமலநாதனும் அட்டோலிக்கன், வெள்ளைநாகன், நாகன்சேய் ஆகிய மூவரும் தம்முயற்சிக்குப் பயன்படுவாரெனவெண்ணி அன்னோரையுங் கப்பலிலேற்றிக்கொண்டு உஞ்சைக்கு வந்தனர்: ஆங்கு

ஆகண்டலனது அரமனையிற் றன்மகனையும் பரிபவையையும் போகவதி மன்னன் கண்டனன். வெள்ளைநாகன் தன்மேற் குற்றஞ்சாராது தப்பிக் கொள்ளும்பொருட்டுப் பரிபவையுடன் கண்டெடுத்த பத்திரத்தைக் கொடுக்க அரசரிருவரும் அதனைப் படித்தவுடனே பரிபவையினுடைய வரலாற்றை யறிந்து உவகைக்கண்ணீர்சொரிந்து வசந்தனுக்கும் பரிபவைக்கும் மணமுடித்துவைக்கவும், இரண்டு ராஜ்யத்தையும் வசந்தனுக்கே யுரிமையாக்கவும் நிச்சயித்தனர். இன்பத்தினிடையே ஆகண்டலன் துன்புற்றுத் தனது மனைவியாகிய அபிராணியை நினைத்துப் புலம்பினான். அரம்பை யென்னுஞ் சேடி முற்பட்டு "ஐயா! என் வீட்டில் அபிராணிராணியைப்போல ஒரு சிலை செய்வித்துவைத்திருக்கிறேன்; வந்து பார்ப்பீர்களாக" என்று அனைவரையும் அழைத்துச் சென்றனள். ஆங்கு அரம்பை யொருதிரையை நீக்குதலும் பீடத்தின்மேலே தூய வெள்ளைவஸ்திரந் தரித்துநின்ற ஓர் உருவத்தைக் கண்டார்கள். ஆகண்டலன் தன் துன்மதியை நினைத்து இரங்கி "ஓவியமே! உயிர் பெற்றுவாராயோ" என்ற அளவில் அபிராணி பீடத்தினின்று இறங்கிவந்து அரசனைத் தழுவிக்கொள்ளுகிறாள். நடந்த வர்த்தமானங்களையெல்லாம் அரம்பை யெடுத்துக்கூற அனைவரும் அளவளாவி யின்புற்றனர்.

[இவ்வளவோடு நாடகம் முடிகின்றது.]

இதற்கடுத்த சரிதையினது கதைச்சுருக்கத்தையுந் தந்தபின்பு உவகைச்சுவையினியல்பை ஆராய்வாம்.

கக. கருதியது எய்திய காதலர்சரிதையை யாராயப்புகுவாம். இதற்கு ஆக்கியோரிட்ட பெயரினை மொழிபெயர்த்துக்கூறின் "பன்னிரண்டாம் இரவு" என்பதாகும் ஒரு விழாக்கொண்டாட்டத்தின் பன்னிரண்டாம் இரவிலே இது முதன்முதல் அரங்கேற்றப்பட்ட தாதலின் இப்பெயரினை யெய்திற்று. கதைச்சுருக்கம் வருமாறு:—மகததேசத்தினின்று புறப்பட்ட ஒரு கப்பலில், சுதாகரனும் விமலையும் பிரயாணஞ் செய்தனர். இவரிருவரும் அன்னைவயிற்றில் ஒருங்கு தங்கியிருந்து பிறந்த இரட்டைப்பிள்ளைகள். மொழி, உருவம், உயரம் முதலியவற்றால் ஒருவரையொருவர் முற்றும் நிகர்த்தவர். கப்பல் ஈழநாட்டுக் கரைக்குச் சமீபமாகச் சேதப்பட்டுப்போயிற்று. ஒரு மாலுமியினது உதவியாற் கரைசேர்ந்த விமலை தன்னைக் காப்பாற்றிய மாலுமியை நோக்கி, "நண்பா! இஃது என்ன நாடு" என்றனள்

மாலுமி: அம்மணி! இது ஈழநாடு.

விமலை: என் னண்ணன் பொன்னாட்டுக்குப் போய்விட்டனர்; எனக்கு ஈழநாட்டிலென்ன வேலை? ஒருவேளை நீரிலமிழ்ந்தாது தப்பியிருக்கவுங்கூடும்.

மாலுமி: அம்மணி! தாங்கள் தப்பியதே பேரதிர்ஷ்டம்.

விமலை: இந்நாட்டினை அரசுபுரிகின்ற மன்னன்பெய ரென்ன?

மாலுமி: மாசேனன்.

விமலை: அவர் பெயரை யென் தந்தை குறிப்பிடக் கேள்வியுற்றிருக்கிறேன்; அவர் அக்காலத்தில் விவாகமாகாதவராக இருந்தார்.

மாலுமி: ஆம், அவருக்கு இன்னும் விவாக மாகவில்லை. ஒருமாதத்துக்குமுன்பு இவ்விடமிருந்து நான் போனபொழுது இந்த வூரிலுள்ள பெரியார் ஒருவரின் புதல்வியாகிய கமலை யென்னுஞ் சீமாட்டிமீது மன்னன் காதலுற்றிருப்பதாக நகரத்து ஜனங்கள் பேசிக்கொண்டார்கள்.

விமலை: இந்தப் பெருமாட்டி எப்படிப்பட்டவள்?

மாலுமி: மிக நல்லொழுக்கம்வாய்ந்தவள். இவளது தந்தை யிறந்து இன்னும் ஒரு ஆண்டு நிறையவில்லை; இதற்கிடையிற் றமையனு மிறந்துபோயினன். இந்நிகழ்ச்சிகளினால் மனமறுகித் துன்புற்று ஆடவர்முகத்தையே பார்ப்பதில்லை யென்னும் விரதத்தோடிருக்கின்றாள்.

விமலை: இந்தச் சீமாட்டியிடம் நான் வேலைக்கமருதல் கூடாதா?

மாலுமி: துன்பத்தினால் வருந்துகிற அந்தச் சீமாட்டி யாரையும் அடுப்பதில்லையென்று தெரிகிறது.

விமலை: நல்லது மாலுமி! நீ யெனக்கு ஒரு உதவிசெய்யவேண்டும்; யான் ஆண்பிள்ளைவேடத்தோடுபோய் மாசேனமன்னனுடைய சேவகத்திலமாக் கருதுகிறேன்; என்னுடைய சகோதானுடைய உடைகளைப்போன்ற உடைகள் சில நீ தயாரித்துக்கொண்டுவருதல்வேண்டும்.

விமலை ஆண்பிள்ளையுடைதரித்துக் கேசவன் எனப் பெயரிட்டுக்கொண்டு மன்னனுடைய சமஸ்தானத்துக்குப்போய் அவனிடத்தில்

வேலைக்கு அமர்ந்தனள். மூன்றுநாட்கள் கழிந்தபின்பு மன்னன் கேசவனை (விமலையை) யழைத்துக் "கேசவா! என் இருதயத்திலுள்ள மர்மத்தையெல்லாம் உனக்குத் தெரிவித்திருக்கிறேன்; நீ கமலை யென்னுஞ் சீமாட்டியினிடத்துப் போய் அவளுக்கு என் காதலைத் தெரிவித்து அவள்மனத்தை என்பாற் றிருப்பவேண்டும்" என்றனன். விமலை மன்னன்மீது தான் காதலுற்றிருந்தாளாதலினால் இச்சொற்கள் அவள் செவிக்கு நாராசமாயின. அங்ஙனமாயினும், எஜமானனுடைய சேவையை இயன்றவரை செய்துமுடித்தல் மரபென்றெண்ணிக் கமலை வீட்டுக்குப் போய் வாயில்காப்பாளன் உட்போகவிடாது தடுக்கத் "திரும்பிப்போகேன்; இவ்வாயிலிலேயேயிருப்பே னென்று உன் சீமாட்டிக்குச் சொல்" லென்று சொல்லிவிட்டு அங்கே யிருந்தாள்; கமலை அழைத்துவரச்சொல்லுதலும் உட்புகுந்து பலவாறாக அவளோடு வார்த்தையாடி அவளது மனத்தினைக் கவர்ந்தனள். கமலை மாசேனனை மறந்து மாசேனனனுப்பிய இளமையும் எழிலும் வாய்ந்த தூதன்மீது காதலுற்றனள். விமலை போயினபின்னர்க் கமலை தனது சேவகனாகிய கோலாகலனை யழைத்து, "இதோ, இந்தக் கணையாழி; மன்னனிடமிருந்துவந்த தூதுவன் இதனை யிங்கு வைத்துவிட்டுப்போயிருக்க வேண்டும்; இதனை யெடுத்துச்சென்று உரியவரிடஞ் சேர்த்துவிடு" என்றனள். கோலாகலன் கொண்டுசென்று கொடுக்க, விமலை தான் கணையாழியை வைத்துவிட்டதில்லையென்றனள்; "அம்மாள் உன்னிடந்தான் கொடுக்கும்படி சொன்னாள்" என்று கூறிக் கணையாழியை யெறிந்து விட்டுக் கோலாகலன் போய்விட்டான். விமலை கணையாழியைக் கையிலெடுத்து அதனை யனுப்பிய கமலையினது குறிப்பை யுணர்ந்து, "ஐயோ! பாவம்! இந்தச் சீமாட்டி எனது ஆண்பிள்ளைவேடத்தைக் கண்டு மயங்கி யென்னைக் காதலிக்கிறாள்; எனது எஜமானனாகிய மன்னன் அவளைக் காதலிக்கிறான்; நானோ மன்னனைக் காதலிக்கிறேன். இக்காதலெல்லாம் எவ்வாறு முடியுமோ அறியே" னென்று தன்னுள்ளே யெண்ணிக்கொண்டு வீதிவழியே போயினள்.

விமலையை மாசேனன் மற்றொருமுறை கமலைவீட்டுக்குப் போகும்படி யனுப்பினான். உவந்து வரவேற்ற கமலை தன்னுள்ளத்தைத் திறந்து, "கேசவ! நான் உன்னைக் காதலிக்கிறேன்" என்று வெளிப்படையாகக் கூறினள். விமலை செய்வதென்னவென் றறியாது விரைந்து விடை

பெற்றுக்கொண்டு மாசேனனுடைய மாளிகையைநோக்கி நடந்தனள். கமலைமீது விருப்பம்வைத்திருந்த சுந்தரராயன் என்னும் பிரபு விமலையை ஆடவனென்றும் கமலையினுளத்தைக் கவர்ந்தவனென்றும் எண்ணி வாளை யுருவிக்கொண்டு சண்டைக்குப்போயினன். விமலை அஞ்சிப் பின்வாங்க அந்நியனொருவன் இடைவந்து சுந்தரராயனைப் பொரப் போகின்றதருணத்தில் மன்னனுடைய காவலாளர் வந்து "நீ ஆதவனெனப் பெயரிய கப்பற்றலைவனல்லையோ? மன்னர்பெயரால் உன்னைக் கைதியாக்கியிருக்கிறோம்; எங்கள் பின்னே வா" என்று அவனது கையைப்பற்றி யிழுத்தனர். ஆதவன் விமலையை நோக்கி, "சுதாகரா! உன்னால் எனக்கு இந்த இடர் வந்தது; நான் தந்த பணப்பையை என்கையிற் றா என்றனன்." விமலை நடந்தசெய்தியை ஊகித்துநோக்கி, இந்தக் கப்பற்றலைவன் தனது தமையனாகிய சுதாகரனுக்கு நண்பனாயிருக்கவேண்டுமென்றும், உருவபேத மில்லாதிருத்தலினாலே விமலையாகிய தன்னைச் சுதாகரனென நினைத்துக்கொண்டானெனவும் அறிந்தனள். நடந்த உண்மையு மதுவேயாகும். விமலை போயினபின் அவ்வழியே சுதாகரன்வந்தான். சுந்தரராயன் வந்து, "அப்போது பிறனுடைய உதவியினாற் றப்பிப்போயினையல்லவா; இந்தா பிடி" யென்று தடியினாலோங்கி யடித்தான். சுதாகரன் அந்த அடியைத் தட்டிவிட்டுச் சுந்தரராயனுக்கு உறைப்பாக நான்கு ஐந்து அடி கொடுத்தான். சுந்தரராயன் திகைத்துநிற்க வீட்டினுள் ளிருந்த கமலை விரைந்துவந்து "சண்டைவேண்டாம், இங்கேவாரும்" என்றழைத்துச் சென்று அருகிருத்திக் காதன்மொழிகளைக் கூறினாள். சுதாகரனுக்கு ஒன்றும் புலப்படவில்லை;

[கமலை சுதாகரனை மன்னனது தூதனாகிய கேசவன் என்றெண்ணினாள் என்பதை நாம் சொல்லவேண்டியதில்லை.]

கமலை சுதாகரனைநோக்கி, "என்னை மணந்துகொள்ளுகிறீரா" என்ன, அவனும் அதற் குடம்பட்டான். அவளும் தருணம்வாய்த்ததென வெண்ணி அருகிலிருந்த புரோகிதரை யழைப்பித்து விரைவில் மணவினையை நிறைவேற்றுவித்தனள் அது முடிந்ததும் சுதாகரன் புறத்தேபோய்த் தனதுநண்பனைப் பார்த்துவிட்டுவருவதாகச் சொல்லிவிட்டுப் போய்விட்டான். சிறிதுநேரத்துக்குள் மாசேனமன்னனும் (விமலையாகிய) கேசவனும் பரிசனரும் கமலையினுடையமனைக்கு வந்

தனர். மாசேனன் தன் காதலை யுரைத்து நிற்கக் கமலை விமலையைச் சுட்டிக்காட்டி, "அதோ என்கணவன்" என்றனள். மன்னன் வெகுண்டு நோக்க, விமலை, "நான் ஒன்று மறியேன்" என்றனள். இத்தருணத்தில் சுதாகரன் வந்தனன். கேசவனாக நின்ற விமலையையும் சுதாகரனையும் ஒருங்குபார்த்தவர்கள் பிரமித்து "ஒரே முகம், ஒரேமொழி, ஒரேஉரு, இது என்ன அதிசயம்" என்றனர். விமலை வர்த்தமான மனைத்தினையுங் கூறிக் கேசவனாகிய ஆண்பிள்ளைவேடத்துக்குரிய உடைகளை நீக்கிவிட்டுச் சொந்தஉடை தரித்துக்கொண்டுவந்து நின்றனள். மாசேனன் அவளதுகையைப்பற்றி "எனது கேசவா! நீ யென்னை நேசித்ததாகப் பல முறை கூறியதுண்டு. இன்றுமுதல் லெனது பட்டத்தரசியாயிரு" என்றனன். அனைவரும் இன்புற்று வாழ்ந்தனர். யாமினி யென்னுஞ் சேடிப்பெண்ணும், கமலையினுடைய நல்லம்மானாகிய தாண்டவராயனும், மானவனென்னும் விதூஷகனும் ஒருங்குசேர்ந்து கோலாசலன் என்னும் சேவகனைப் பரிகசிப்பதனைக் கூறும் ஒரு கிளைக்கதை இந்நாடகத்தினுள் வருகின்றது; இக் கிளைக்கதை நகைச்சுவை நிறைந்தது.

உவகைச்சுவையானது செல்வம், புலன், புணர்வு, விளையாட்டு என்னும் நான்கும்பற்றி யெழுவது. "செல்வம் என்பது நுகர்ச்சி, புலனென்பது கல்விப்பயனாகிய அறிவுடைமை, புணர்வு காதலிருவர் கருத்தொத்தல், விளையாட்டு யாறுங் குளனுங் காவு மாடிப் பதியிகந்து வருதல்" என உறுப்பியலுட்கூறினும். இரதிகாந்தன் கோகிலவல்லி, நீலாம்பரன் கேகயவல்லி, சீதரன் பாவை, சல்லாபன் ஆதிரை, வசந்தன் பரிபவை, மாசேனன் விமலை, சுதாகரன் கமலை யென்னும் எழிரண்டு காதலரிடத்தே "காதலிருவர்கருத்தொத்த" உவகைச்சுவைதோன்றிற்று. கோகிலவல்லி விமலை யாகிய இருவரிடத்தும் அறிவுடைமைபற்றிய உவகைச்சுவை தோன்றிற்று. கமலையிடத்துச் செல்வம்பற்றிய உவகைச்சுவை தோன்றிற்று. இரதிகாந்தன்கோகிலவல்லியிடத்து விளையாட்டுப்பற்றிய உவகைச்சுவை தோன்றிற்று.

கஉ. பெருமிதச்சுவையையாவது உவகைச்சுவையையாவது செவ்விதிற் றெரிவித்து ஏனைய சுவைகளையுந் தழுவிநடப்பது நாடக லக்ஷணமாமென வடமொழி தமிழ்மொழிப் பெரியோர் கூறுபவாகலின் நாம் மேலேகாட்டியசரிதைகளுள் இரம்மியன்சுசீலைசரிதை, பெரும்புயற் சரிதை, வணிகதேயவர்த்தகன்சரிதை, யூலியசீசர்சரிதை, வேனிற் காதை, கூதிர்க்காதை, கருதியது எய்திய காதலர்சரிதை யென்னும் ஏழுமே நாடகமாவன. ஒழிந்த ஐந்தினையும் பிரகாரணம், நாடிகையென்னும்

வகைகளு ளடக்கிக்கொள்க.) இவ்வேழனுள்ளும் சுசீலை, மாலதி, விஜயை, பதுமை, கல்பூர்ணியா, கோகிலவல்லி, அயிராணி, பரிபவை, விமலை, கமலை யாகிய தலைவியர் பதின்மரை யெடுத்துக்காட்டினும். வடமொழி நூலார் தலைவியரை வகுத்துக்கொண்ட எண்வகைவகுப்பினுள்ளே குறியிடத்துத் தலைவன் முற்படாதொழிய மனமலைந்தநிலையிற் சுசீலை விப்பிரலப்தையாவாள்; நாயகர் அண்மையிலிருந்து குற்றேவல்புரிய உவகையுற்றிருந்தோராகிய மாலதியும் பரிபவையும் சுவாதீனபர்த்ருகை யாவார்; கணவன் முன் கொடுத்த மோதிரத்தைப் பிறளொருத்திக்குக் கொடுத்துவிட்டானெனக் கூறி வெகுளிக்குறிகாட்டியநிலையில் விஜயை கண்டிதையாவாள்; அணிகல னணிந்து புட்கலனதுவரவுகாத்திருந்த பதுமை வாசகசஜ்ஜையாவாள்; தலைவனது பிரிவாற்றாது துன்புற்ற கல்பூர்ணியா வீரஹோற்கண்டிதையாவாள். கேசவனிடத்து வெகுளிக் குறிகாட்டி அவன் பிரிந்தபின்பு துன்புற்றிரங்கியநிலையிற் கமலை கலகாந்தரிதையாவாள், குறியிடத்துத் தலைவனை நாடிச் சென்ற கோகில வல்லி அபிசாரிகையாவாள். தலைவனை நெடுநாட் பிரிந்திருந்தநிலையில் அயிராணி பிரோசிதப்பிரியை யாவாள். மாசேனன்பாற் காதற்குறி காட்டியநிலையில் விமலையும் அபிசாரிகையாவாள். எண்வகைத் தலைவி யரி னிலக்கணங்களை ஒழிபியல் இரண்டாம்பிரிவினுட் காண்க. மேலே காட்டிய பதின்மரும் சுகுணையும் சாந்தையு மாவர். மகபதிப்பிரியை, மாணிக்கமாலை, தமோரா வாகிய மூவரும் காமினியும் அரக்கியு மாவர்; தலைமக்களை வடமொழிநூலார் நால்வகைப்படுத்துக் கூறுவர். வசந்தனும் பிரியதத்தனும் தீரலலிதர்; மாசேனனும் அநந்தனும் தீரசாந்தர்; இரம்மியனும் இரதிகாந்தனும் தீரோதாத்தர்; மகபதியும் சாபலனும் தீரோத்ததர்; தலைமக்க ளிலக்கணத்தை ஒழிபிய லிரண்டாம்பிரிவினுட் காண்க. செகசிற்பியாரியற்றிய நாற்பத்தைந்து தனிநூல்களுட் சிறப் புடைய பன்னிரண்டினைத் தெரிந்து அவற்றது வனப்பையும் அமைப் பையும் தொகுத்தும் விரித்தும் இயன்றவரை விளக்கினும். தமிழறிஞ ரியற்றிய செகசிற்பியார்நாடகமொழிபெயர்ப்புக்களுஞ் சில வுள; அவற்றையு மாராய்தல் நன்றெனக் கூறி யிவ் வெடுத்துக்காட்டியலை முடிக்கின்றும். [தொடரும்]

விபுலாநந்தர்.

கம்பராமாயண இன்கவித்திரட்டு.

(௨௨-ந் தொகுதி ௪௯௯-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

அயோத்தியாகாண்டம்.

[அயோத்தியில் நிகழ்ந்த செய்திகளாகிய, தசரதன் இராமனை நாடாளும்படி கற்பித்தலையும், கைகேயி காடேகும்படி விகற்பித்தலையும் கூறுவது.]

மந்திரப்படலம்.

[தசரதன், குருமார் மந்திரிமார்களோடு, இராமனுக்கு முடிசூட்டுவதைப்பற்றி ஆலோசித்தலைக் கூறுவது. மந்திரம் - ஆலோசனை.]

கடவுள் வணக்கம்.

211. வானின்றிழிந்து வரம்பிகந்த மாபூதத்தின் வைப்பெங்கும்,
ஊனும் உயிரும் உணர்வும்போல், உள்ளும் புறத்தும் உளனென்ப
கூனும் சிறிய கோத்தாயும் கொடுமை இழைப்பக், கோல் துறந்து,
கானும் கடலும் கடந்திமையோர் இடுக்கண் காத்த கழல்வேந்தை.

இ - ள். கூனியாகிய மந்தரையும் சிறியதாயாகிய கைகேயியும் கொடுமைசெய்ய, (அதனால்) அரசைக்கைவிட்டுக், காட்டையும் கடலையும் தாண்டி (ச் சென்று, இராவணாதி இராக்கதரை அழித்துத் தேவர் துன்பத்தை (நீக்கி)க்காத்த இராமபிரானைப்,—பரமாகாயத்தினின்று தோன்றி எல்லைகடந்த (நிலம் நீர் தீ வாயு ஆகாயமாகிய ஐம்) பெரும் பூதங்களில் எவ்விடத்தும், உடம்பும் உயிரும் உணர்வும்போல உள்ளேயும் புறத்தேயும் இருக்கின்றவனென்று கூறுவார்கள் (மேலோர்).

வான் - ஆகாயம். வானின்று இழிந்த பூதமென்பதில் 'பூதம்' வானையுள்ளிட்ட பூதங்களனைத்தையும் புலப்படுத்துதலால், 'வானின்று' என்பது, சாதாரண ஆகாயத்துக்கு மேற்பட்ட பரமாகாயமெனப்

பொருள்கொள்ள நின்றது. இழிந்து - இறங்கி; தோன்றி யென்ற பொருள்குறித்தது. இகந்த - கடந்த. வைப்பு - இடம். ஊன், கூன், கோல் என்பவை, ஆகுபெயராய் முறையே உடம்பு, கூனி, அரசு என்ற பொருள்களைப் புலப்படுத்தின. கோ - அரசன். கோத்தாய் - அரசர் குலத்தினளாகிய தாய். கோல் - செங்கோல். இழைப்ப - செய்ய. துறந்து - விட்டு. இடுக்கண் - துன்பம். உருக்காட்டு படலம், உக-ம் பாட்டில், சாகுதல் அடையாமற் காப்பவரைச் 'சாதல் காப்பவர்' என்றதுபோல, 'இடுக்கண்காத்த' என்றார். காத்தல் - தடுத்தல். (உக-ம் குறள் உரை).

இராமன் வாகனமின்றிப் பாதசாரியாய்க் காட்டை நடந்து கடந்ததன்றிக் கடலையும் தான்கட்டுவித்த சேதுமீது நடந்து கடந்தனனென்பது விளங்கக் கானும் கடலும் கடந்த கழல் என்றார். (கழல் - கால்).

இராவணாதி யிராக்கதரை வென்ற "வெற்றித்திறலை விளக்கவே யணிந்த வீரக்கழலை யுடையான் என்பதுபடக் கழல்வேந்தை" என்றா ரெனலுமாம். (இப்பொருளில் கழல் - வீரகண்டை - வீரத்தைக்குறிக்கக் காலில் அணியும் ஓர் ஆபரணம்.)

'உள்ளும் புறத்தும் உளன் என்பதை உள்ளும் உளன், புறத்தும் உளன், என அந்வயித்துப், பிண்டமாகிய உடலுக்குள்ளே உயிரும் உயிருக்குள்ளே உணர்வும் இருத்தல்போல, அண்டமாகிய உடலுக்குள்ளே உயிரும் அவ்வுயிருக்குள்ளே அறிவுமாய் அண்டத்தினுள்ளே யிருக்கின்றவன், அண்டத்தின் வெளியேயும் இருக்கின்றவனென்று பொருள் செய்யலாம்.

பலமில்லாமையால் 'அபலைகள்' எனப்பட்ட பெண்கள்செயலால் அரசிழந்து காடே கதியாகப்போய் எல்லாரும் இரக்கப்படும்படியான எளியவனானவனே, தேவர்களையும் செயித்த அதி பலசாலிகளான இராக்கதரை வென்ற வலியவனுமானான் என்றதனால், இராமபிரான், தான் பலவீனரான பெண்கள் கொடுமைக்குட்பட்டுத், தேவர்களைப் பலசாலிகளான இராக்கதர் கொடுமைக்குட்படாமற் காத்து, அறத்தை நிலைநிறுத்த, எளியார்க்குளெளியனும் வலியார்க்கு வலியனும் ஆனானென்றார்.

[தசரதன், ஆலோசனை மண்டபத்தை அடைந்து, தனியாயிருந்து கொண்டு, ஆலோசனைக்குரியவர்களை அழைத்துவரும்படி தூதரை ஏவ, அவர்கள் அழைக்க, மும்மூர்த்தியரொடு நான்காம் மூர்த்தியென்று எண்ணத்தக்க வசிட்டன் வந்தான் : மந்திரிகளும் வந்தார்கள்.]

212. உற்றது கொண்டு மேல்வந் துறுபொருள் உணரும் கோளார்;
மற்றது வினையின் வந்த தாயினும், மாற்றல் ஆற்றும்
பெற்றியர் ; பிறப்பின் மேன்மைப் பெரியவர் ; அரிய நூலும்
கற்றவர் ; மானம் நோக்கில், கவரி மா அனைய நீரார் ;

இ-ள். (அந்த மந்திரிகள்,) நேர்ந்த காரியத்தைக்கொண்டு இனிமேல் நேரும் காரியத்தை (ஊகித்து) அறியும் (மதி) வன்மை உடையவர் ; அந்த நேர்ந்த காரியம் வினைப்பயனாக நேர்ந்ததானாலும், (அதனை) மாற்றுதல் செய்யும் தன்மையினர் ; (நல்லகுடிப்) பிறப்பின் சிறப்பினையுடைய பெருந்தகையாளர் ; (கற்கவேண்டிய) நூல்களைக் கற்றவர் ; மானத்தை (உயிரினும் சிறந்ததாக)க் காத்தலை நோக்கினால், (ஒரு மயிர் நீங்கினும் உயிர்வாழாத) கவரிமானை ஒத்த தன்மையுடையவர் ;

உற்றது - நேர்ந்தது - நேர்ந்தகாரியம். உறுபொருள் - அக்காரியம் காரணமாக இனிமேல் நேரும் காரியம் : மற்றது, 'உற்றது' என்பதைச் சுட்டியது. கோள் - வலி; வன்மை. வினையின் வந்தது—முன் செய்தவினையின்பயனாக வந்தது. ஆற்றும் - செய்யும். பெற்றி-தன்மை.

இப்பாட்டில் "மதிநுட்பம் நூலோ டுடையார்க்கதி நுட்பம் - யாவை முன்நிற்பவை", "ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்—தாழா துஞற்று பவர்," "மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்—உயிர்நீப்பர் மானம் வரின்" என்ற மூன்று குறட்கருத்துக்கள் இனிதெடுத்தாளப்பட்டிருத்தல் காண்க.

[குறித்த காரியத்தை முடித்தற்கு ஏற்ற காலம் இடம் சாதனங்களைத் தாம் கற்ற நூலைத் துணையாகக்கொண்டு ஆராய்ந்து தெரிந்து அறநெறிமுறையே அக் காரியத்தை முடிப்பவர்; தமக்கென ஒன்றையும் நாடாமல், தம் தலைவனுக்கே புகழும் புண்ணியமும் பொருந்தும்படி புரிபவர்;]

213. தம்முயிர்க் குறுதி எண்ணார், தலைமகன் வெகுண்ட போதும்,
வெம்மையைத் தாங்கி, நீதி விடாது நின் றுரைக்கும் வீரர்;
செம்மையிற் றிறம்பல் செல்லாத் தேற்றத்தார்; தெரியும் கால
மும்மையும் உணர வல்லார்; ஒருமையே மொழியும் நீரார்;

இ-ள். தலைவன் கோபித்தாலும் (அவன் கோபத்தினால்) தம் உயிருக்கு (க் கேடு நேராமல், அக் கோபத்தினின்று தப்பிக்கொள்ளும் பொருட்டு விலகும்) நன்மையைக் கருதாராய், (அவன் கோப) வெம் மையைத் தாங்கி (விலகாமல்) நின்று, (சொல்லவேண்டிய) நீதியை (ஒரு முறை சொன்ன அளவில் ஏற்றுக்கொள்ளவில்லையானால், பலமுறை) விடாது சொல்லும் (துணிவுடைய வீரர்; நடுவுநிலையினின்றும் பிறழாத உறுதியுடையவர்; தெரியவேண்டிய திரிகால (சம்பவ)ங்களையும் தெரிய வல்லவர்; (தாம் பலபட ஆராய்ந்து துணிந்த முடிபை ஆராய்ந்தவாறே பலபடக் கூறினால், மயக்கத்துக் கிடமாமென்று அந்த முடிபு) ஒன்றை யே (தலைவனுக்குச்) சொல்லும் தன்மையினர்;

உறுதி - நன்மை; உறுவது - சம்பவிப்பது (சங்க அகராதி). இப் பொருள்பற்றித் 'தம்முயிர்க் குறுதி யெண்ணார்' என்பதற்குத், தலைவன் கோபத்தால்தம் உயிர்க்குக்கேடுசம்பவிப்பதைப் பொருட்படுத்தாதவராய்' என்றும் பொருள்கொள்ளலாம். தலைமகன் - தலைவன்-அரசன். 'தாங்கி நின்று விடாது நீதிஉரைக்கும்' எனக் கூட்டுக. செம்மை - நடுவுநிலைமை; ஒழுக்கம்-முறைமை. திறம்பல்-தவறுதல்-மாறுபடல். செல்லா-அடையாத (சங்க அகராதி). சிந்தாமணி 2506-ம் பாட்டில் 'இமையான் என்பது 'இமைத்தல் செய்வான்' எனவரல்போல, 'திறம்பா' என்பது திறம்பல் செல்லா' எனவந்தது. மும்மை-மூன்று ('இருமைவகை' என்ற குறள் உரை). ஒருமை - ஒன்று (ஷ). 'ஒருமையே மொழியும் நீரார்') என் பதற்கு, மந்திரிகள்பலராயினும், ஒவ்வொருகாரியத்திலும் உண்மையான முடிபு ஒன்றேயாதலால், அம் முடிபை எல்லாரும் கண்டுபிடித்து, அவ் வொருமுடிபையே ஒருவர்போல எல்லாரும் ஒருமைப்பட்டுச் சொல்லும் தன்மையினரென்றும், ஒருகாற்சொன்னதை மறுகால் மாற்றாத ஒரு சொல்லாளரென்றும் பொருள் கூறலாம்.

[தலைவனுக்கு, இவை நல்லவை இவை தீயவையெனநாடி யறிந்து, தீயவை வாராமல் விலக்குபவர்; அவனுக்கு நோய்வந்தகாலத்து, வயித்தி

யர்போலத் தீங்குவந்தகாலத்து உதவுபவர்; அவனுக்குத் தீவினைப்பயன் நேர்ந்தால், அதனை மாற்றுதற்கு அவனுடைய நல்வினைப்பயன்போல உதவும் ஆலோசனை யுடையவர்.]

[அந்த மந்திரிகளைத் தசரதன் நோக்கி, "உயிர்க்கு உறுதிதரும் ஒரு செய்தி என் உள்ளத்தில்உள்ளது. அதனை உரைக்கின்றேன். கேளுங்கள்; எனது சூரியகுலத்து மன்னர் முறைபிறழாது தொன்று தொட்டு அரசு செய்த பூமியைக் கன்னியர் கற்பைக்காத்தல் போல உங்கள் உதவிகொண்டு அறுபதினாயிரம் ஆண்டு காத்து மன்னுயிர்க்கு நன்மை செய்த யான், என்னுயிர்க்கு நன்மை செய்ய எண்ணுகின்றேன். ஆதிசேடனும் அஷ்டதிக் கஜங்களும் அஷ்டகுல பர்வதங்களும் சேர்ந்துசுமத்தற்கரிய பூபாரத்தை யானொருவன் நெடுங்காலம் தாங்கி அலுத்தேன்; இனித்தாங்க இயலாதவனாயிருக்கின்றேன்.]

214. "வெள்ள நீர் உலகினில் விண்ணில் நாகரில்
தள்ளரும் பகை யெலாம் தவிர்த்து நின்ற யான்,
கள்ளரில் கரந் துறை காமம் ஆதி யாம்
உள்ளுறை பகைஞருக் கொதுங்கி வாழ்வெனோ?

இ. ள். "பூதலத்திலும் மீதலத்திலும் பாதலத்திலும் (இருந்த) ஒழித்தற்கரிய பகைவரெல்லாரையும் ஒழித்து (வெற்றிபெற்று) நிற்கின்றயான், கள்வரைப் போல ஒளித்து வாழ்கின்ற காமம் முதலான உட்பகைவர்க்கு ஒதுங்கி வாழ்வேனோ?

வெள்ளம்—கடல். வெள்ள நீர் உலகு—கடல் நீர் (சூழ்ந்த) உலகம்—பூமி. 'நாகர்' நாகர்வாழும் பாதாளஉலகத்தைக் குறித்தது. கள்ளரில்—கள்ளரைப் போல.

மண்ணுலகத்தை 'வெள்ள நீருலகு' என்றது பின் வரும் விண்ணுலகமும் நாகர் உலகமும் அவ்வாறு கடல் சூழ்ந்தன அல்ல என்பதை உணர்த்தியது. 'பகைவரெல்லாரையும்' எனற்குரிய உயர்திணைப் பொருளைப் 'பகையெலாம்' என அஃறிணைச் சொல்லாலும் 'பகைகளுக்கு' எனற்குறிய அஃறிணைப் பொருளைப் 'பகைஞருக்கு' என உயர்திணைச் சொல்லாலும் பொருத்தமாக மாறிக்கூறிய நயம் காணத்தக்கது.

'என் நாட்டுக்குவெளியே, வெளிப்படையாய் வாழ்ந்த, பெருஞ் சேனைபலம் படைத்திருந்த, மாற்றரசரான பல புறப் பகைவரை அஞ்சி யொதுங்காமல் எதிர்த்து வெற்றிபெற்றிருக்கின்ற யான், என் நாட்டுக்குள்ளே ஒளித்து வாழ்கின்ற சிறுகூட்டப் பலமேயுள்ளசிலதிருடர் போல, என் அகத்துக்குள்ளே ஒளித்து வாழ்கின்ற காமக் குரோத லோப மோக மத மாற்சரியங்களான சில உட்பகைவருக்கு அஞ்சி ஒதுங்கியிருந்து உயிர்வாழ்வெனோ? வாழேன்' என்று பொருள் இனிது விரிதல் காண்க.

["சம்பராசுரன் முதலிய பகைஅசுரர் ஏறிய தேர் பத்தைவென்ற எனக்கு மனப் பேய் ஏறிய இந்திரியத் தேர் ஐந்தை வெல்லுதல் அருமையாமோ ?

பிறவிக் கடலைக் கடத்தற்குத் துறவுப் புணையே துணையாம். (புணை - தெப்பம்).

ஒரு பறவைக்கு வலப்பக்கச் சிறகும் இடப்பக்கச் சிறகும் இருத்தல்போலச், சீவனுக்குத் துறவு ஞானம் என்னும் இருசிறை யுண்டானால், பிறவியென்னும் ஒரு சிறையினின்று தப்பி நீங்கலாம். (சிறை - சிறகு; சிறைச்சாலை.)

என் மனம் துன்பந்தரும் நாட்டரசாட்சியை வெறுத்து இன்பந் தரும் வீட்டரசாட்சியிற் பதிந்தது.

இவ்வுலகத்தை ஆளுதற்கு உதவிய நீங்கள் அவ்வுலகத்தை ஆளுதற்கும் உதவவேண்டும்.

215. "கச்சை அம் கட கரிக் கழுத்தின் கண் உறப்,
பிச்சமும் கவிகையும் பெய்யும் இன் நிழல்,
நிச்சயம் அன்றெனின், நெடிது நாள் உண்ட
எச்சிலை நுகருவ தின்பம் ஆகுமோ?

இ - ள். "யானைக் கழுத்தின்மேற் பொருந்தும் மயிற்பீலிக்குடையும் வெண்கொற்றக்குடையும் இடுகின்ற நிழலானது (எனவே அந்த

நிழலின்கீழ் அந்த யானைப்பிடரின்மேல் வீற்றிருந்து பவனிவரும் அரசச் செல்வமானது) நிலையானதன்று: என்றால் பலநாளும் நுகரப்பட்ட எச்சிலை (—இராசபோகங்களை) நுகருவது இன்பமாமோ? (ஆகாது.)

கச்சை - யானையின்கழுத்திற்கட்டும் கயிறு. பிச்சம் - மயிற்றோகைக் குடை. பெய்தல் - இடுதல். நிச்சயம் அன்று - உறுதியானதன்று—நிலையானதன்று. எனின் - என்னின் - என்றால். இதற்கு 'என்றால்' என்று முந்திய உரைகாரர்கள் உரை செய்தனர்.

["மக்கள் இல்லாமையால் இராச்சியபாரத்தை நெடுங்காலம் சுமந்து நொந்தேன். என் நோவை நீக்க இராமன் வந்தனன். இனி அவன் அப் பாரத்தைத் தாங்கவைத்து, நான் தப்பி ஈடேறும்படி துறவுபூண உறுதி செய்தேன்.

'வீரர்க்குள் வீரனை இராமன் பிதா, போர்க்களத்தில் இறந்து வீரசுவர்க்கமடைந்தானல்லன். செய்யவேண்டிய யாகாதி தருமங்களெல்லாம் செய்துமுடித்து மூப்படைந்தபின் செய்யற்பாலதாக எஞ்சிநின்ற துறவறத்தை மேற்கொண்டானல்லன்' என்ற பழிச்சொல் உண்டாகியது. இனியும் துறவேனெனில், 'முத்தியடைதற்குச் சாதனமாகிய மனிதப்பிறப்பிற் பிறந்த பயனை அடைந்திலன்' என்ற தீச்சொல்லன்றி நற்சொல் பிறவாது.

இராமன் பிறந்த திருநாட் பண்டிகையையும் சீதாதேவியாகிய சீதேவியை மணந்த திருநாள் விழாவையும் கண்டு மகிழ்ந்த யான், அவன் பூதேவியை மணக்கும் திருநாள்மகோற்சவத்தையும் கண்டுமகிழ விரும்புகின்றேன். இராமனை அடையப் பூதேவி செய்த தவத்தின் பயனை அவள் அடையாமல் தாமதப்படுத்துவது தருமமன்று. ஆதலால் அரசாட்சியை இராமனிடம் கொடுத்து நான் தவம் செய்ய வனத்துக்குச் செல்லுங் கருத்துடையேன். உம் கருத்து யாது?" என்றான்.]

216. திரண்ட தோளினன் இப்படிச் செப்பலும், சிந்தை
புரண்டு மீதிடப் பொங்கிய உவகையர், ஆங்கே
வெருண்டு, மன்னவன் பிரிவெனும் விம்முறு நிலையால்,
இரண்டு கன்றினுக் கிரங்கும் ஓர் ஆ என இருந்தார்.

இ - ள். தசரதன் இவ்வாறு கூற, (ராமன் முடிசூடும் சந்தோ டத்தினால்) மனத்தடத்தில் (அடங்காமல் கரை) புரண்டு ததும்பிப் பொங்கிய உவகை(ப்பெருக்கு) உடையவராகிய மந்திரிகள், அதே சமயத்திலே தசரதர் பிரிவென்னும் சோக தாபத்தினால் (அவ் உவகைப் பெருக்கு வற்றி யொழிய) மதிமயங்கி, (வெவ்வேறு திசைநோக்கி ஓடுகின்ற இரட்டையாய்ப் பிறந்த தன்) இருகன்றுகளுக்கு (அன்புகூர்ந்து தான் எந்தக் கன்றைப் பின்பற்றிச் சென்று அடைவதென்று துணிய மாட்டாமல் திகைத்துநின்று) வருந்தும் ஒரு பசுப்போல (மறுமொழி கூற வாய்திறக்கமாட்டாமல் வாளா) இருந்தார்கள்.

[ஆயினும், அவர்கள் தசரதனுக்குத் துறவல்லது வேறு உறுதி யில்லையென்பதனாலும் இராமனைக்காட்டிலும் சிறந்த மன்னவ ரில்லையென் பதனாலும் தசரதன் கருத்துக்கு மனமிசைந்தார்கள். அவர்கள் சம் மதித்த குறிப்பையும் தசரதன்கருத்தையும் குடிகளின் நன்மையையும் தெரிந்து வசிட்டன்,

"தசரத, நீதவம் செய்யக் கருதியது தக்கதே. இராமனைப் பெற்ற தனால், நீ உனது குல மன்னவரெல்லாரினும் சிறப்புற்றாய் பூதேவி உன்னைப்பிரிந்ததனால் ஆதரவற்றவளாயினாளல்லளென்று சொல்லும்படி அவன் அரசு செய்வான். அவன், திரிமூர்த்திகளும் ஒரு மூர்த்தியா யவதரித்தவன்: சீதேவியும் பூதேவியும் பிராணநாதனாகக் கருதுகின்ற வன். அவனை உன்உயிர்க்கு நல்லவனென்று சொல்லுதல் பெருமை யன்று; உன்உயிர்க்குப்போல எல்லார் உயிர்களுக்கும் நல்லவன்.

அப்படி நல்லவனாகிய அவனுடைய அன்புடைமையை இனி நான் என்னென்று சொல்வது! தினமும் அவன் திருநாமத்தை ஓதலால் எல்லா இடையூறுகளும் நீங்குகின்ற பயன் கருதி அவனை அந்தணர் முதலிய அனைவரும் தங்கள் தங்கள் நல்வினைப்பயனென்று கருதுகின்றார்கள். அவனைக் கற்றோரும் மற்றோரும் உண்ணும் நீரினும் உயிரினும் அதிகமாக விரும்புகின்றார்கள். மூன்றுலகத்திலும் அவனினும் சிறந்தவரில்லை. ஆதலால், அவனை அரசுபுரியச்செய்து நீ துறவு புரிதலினும் சிறந்தது வேறில்லை" என்றான்.

(தொடரும்.)

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

ஓர் பாடாந்தரம்.

“படையுழவெழுந்தபொன்னும்பணிலங்களுயிர்த்தமுத்தும்
இடறியபரம்பிற்காந்தும்இனமணித்தொகையுநெல்லு
மிடைபசுங்கதிருமீனுமென்றழைக்கரும்பும்வண்டுங்
கடைசியர்முகமும்போதுங்கண்மலர்ந்தொளிருமாதோ.”

என்பது, கம்பரது இராமாவதாரம் நாட்டுப் படலத்தின்கண் வருவதொரு சிறந்த பாசுரமாகும். இதனைப் பலவகையாகப் பாடபேதப் படுத்திப் பொருளுரைக்கின்றனராகலின், நிரலே யிதனை யாராய்ந்து உண்மைக்கருத் தின்னதென்பதனை யொருவாறு நிலையிடுவோம்.

மருதநிலமக்கள் நிலத்தை ஏராகிய கருவியைக்கொண் டுழுகையில் அந்நிலத்தினின்றெழுந்த பொற்கட்டிகளும், சங்குக ளீன்ற முத்துக்களும், இடறிய பரம்பினிடத்தேபொளிர்கின்ற ஒரோராசியாகிய ரத்தினங்களின்தொகுதியும், நெற்கள் நெருங்கிய பசுமையாகிய கதிர்களும், மீன்களும், மெல்லிய தழைகளையுடைய கரும்புகளும், வண்டுகளும், மருதநிலத்துப்பெண்களது முகங்களும், மலர்களும் ஆங்காங்குக் கண் மலர்ந்து விளங்கும் என்பது இச்செய்யுளின் பொழிப்புரையாகும்.

பொற்கட்டிகளும் முத்துக்களும் ரத்தினங்களின் கூட்டங்களும் கண்மலர்ந்தொளிர்தலாவது அவைகள் கிடக்கின்ற இடத்திலேயே கிடந்து ஒளிவீசி மிளிர்தலாமென்பது. நெல்லு மிடைபசுங்கதிரும் என்றதனால் நெற்பயிர்களின்வளர்ச்சியும் செழிய அவற்றின் பசுமையான கதிர்களின்வனப்பும் பெறக்கிடக்கின்றன. ‘கதிர்வாலின் செந்நெலுள’ என இதன் சிறப்பையும் இயற்கையையும் ஆரணியகாண்டத்தில் அகத்தியப் படலத்து இவர் கூறியிருப்பதூஉங் கருதற்பாற்றும். கதிர்களையும் வாலி னையுமுடைய செந்நெற் பயிர்க ளென்றும், அணிலினது சடைத்த வால்போல் (விளங்கும்) கதிர்களையுடைய செந்நெற்பயிர்களென்றும், இத்தொடர்க்குச் சிறந்தபொரு ளமைதல் காண்க. யாண்டும் இங்ஙனமே இயற்கைப்பொருள்களை நன்குவிவரித்துரைத்தல் இவர்க் கியல்பா மென்க.

அக்கதிர்கள் கண்மலர்ந்தொளிர்தலாவது இடங்கடோறும் பரந்து விளங்குதலாம். மீன் கண்மலர்ந்தொளிர்தலாவது மகளிர்கண்போல் விளங்குதலாம். பிரசித்தமான உபமானம் இதில் மாற்றிச்சொல்லப் பட்டதால் எதிர்நிலையணிதோன்றுதல் காண்க. வடமொழியாளர் இதனைப் பிரதீபாலங்கார மென்பர். நீட்சியாலும் பிறழ்ந்தொளிர்தலாலும் மீன், கண்ணுக்குவமைப்பொருளாம். கரும்பு, கண்மலர்ந்தொளிர்தலா வது கணுக்களாற் பொலிவுபெற்றிலங்கலாம். 'மென்றழைக்கரும்பும்' என விசேடிக்கப்பட்டது; அது மெல்லியதழைகளைமாத்திரம் கொத்தாக நுனியின்கண் உடையதாதல்பற்றி யென்க. இதனைக் கொழுந்தாடை யெனவும், கொழுந்தாளை யெனவுங் கூறுவர் உலகத்தார். இஃதன்றிக் கதிர்களையுடையது அன்மையானும், கரும்புக்கதிர் என வழக்கின்கண் யாண்டும் பயிலக் காண்கின்றிலமாகலானும், கதிரென்னும் பெயர்வழக்கு இதற்கின்மை யீண்டுணரத்தக்கதாம். இப்பெற்றியினியற்கையைக் கருதியுரைத்த நம் கவியரசர்மாண்பும் ஈண்டைக்கு நோக்கத்தக்கதா மென்க.

இப்பெற்றி யுணராதார் இக்கவியிலுள்ள 'நெல்லும்' என்பதைத் தனியேபிரித்தெண்ணி, 'மிடைபசுங்கதிரும், ஈனும் மென்றழைக் கரும்பும்கண்மலர்ந்தொளிரும்'எனக் கண்ணழித்து, 'கதிரும்' என்பதி லுள்ள உம்மையைச் சாரியை யெனத் தள்ளி, நெருங்கிய பசியகதிர் களை யீனுகின்ற மெல்லியதழையையுடைய கரும்புகளும் கணுக்களால் மலர்ந்து விளங்கும் எனப் பொருளுரைப்பர். கரும்புகள் கதிர்களை யீனுகின்றன என்பதிற் பெறப்பட்டு இயற்கையோடுமுரணி, முன்னர் யாமுரைத்ததோடும் மாறுபடுகின்றதாகலின் அவ்வுரை யீண்டைக்குச் சற்றும் பொருந்தாதாமென்க அன்றிக் 'கதிரும்' என்பதிலுள்ள உம்மையை யாவசியகமின்றி யீண்டுச் சாரியை யென்றலும் சாலாதாம். மற்றிதற் குண்மைப்பொருள் யாதென்பதனையும் ஆராய்வாம்.

நெல்லுமிடைபசுங்கதிரும்மீனும்,எனக் கண்ணழிவு செய்து, நெல் என்ற சொல் உகரச்சாரியை யேற்றதெனக்கொண்டு, நெல்நெருங்கிய பசுங்கதிர்களும் என உரைத்தலே யீண்டுச் சிறப்புடைத்தா மென்க. அன்றி, இப்பாடமே யீண்டைக்கேற்பதும் நுணுகியுணரத்தக்கதாம். நெல், சொள், எள், புல், முதலிய பெயர்கள் உகரச்சாரியை பெற்றும், பெறாதும், வழக்கினகத்தும், செய்யுளிடத்துந் தக்கபெற்றி வருத லாங்காங் குணர்க. இம்முறையில் நெல் என்பது ஈங் குகரச்சாரியை பெற்றுவந்ததா மென்க.

'நெல்லும்' என்பதைத் தனித்தெண்ணி, மிடைபசுங்கதிரும் என் பதனை வேறொருதானியத்துக் குரைக்கலாமெனின், கதிர் என்னும் பெயர்க்குரிய நெல்லொன்றே நன்செய்க்குரியதாகலானும், அதுவன்றி மற்றெதுவுங் கதிரெனற்கின்றி நன்செயில் விளைவதின்மையானும் அங்ஙனமுரைத்தல் இயலாதா மென்க. கரும்பு, வாழை, மஞ்சள் ஆதியன நனசெய்விளைவுக்குரியவாயினும், ஈண்டுக் கதிரென்றற்குரிய வகுப்பிற் சோற் கியலாதென்பது எளிதி லுணரத்தக்கது. ஆகவே யாமுரைத்ததே யீண்டுச் சிறந்தபொருளாதல் காண்க. 'நிலத்துக்கணி யென்பநெல்லுங்கரும்பும்' என்று நானமணிக்கடிகையிற்கூறியபடி நன் செயில்விளைவதற்குரிய அவ் விரண்டு சீரியபொருள்களையுமே நம் கவியரசர் ஈண்டுச் சிறப்பித்துரைத்தாரென்க. பெரும்புனனதிகளுங் குளனும் பெட்பறக், கரும்பொடு செந்நெலுங் கவின்கொண்டோங்கிட, இரும்புயல்ககனமீதிடைவிடாதெழுந், தரும்புனல்சொரிந்தபோ தாசுணர்ந்தனண" பிறிதோரிடத்தும் இதனை நங்கவியரசர் புனைந் துரைத்திருப்பதனை நன்குணர்க.

இனி 'நெல்லுமிடைபசுங்கதிருமீனும் மென்றழைக்கரும்புங் கண் மலர்ந்தொளிரும்' என்பதற்கு வேறுமொருபொரு ளுரைப்பரொருசாரார். அஃது தீண்டு வருமாறு:—கண் களமென்பதன் கடைக்குறையாகிய கள்

என்பது 'மெலிமேவி னணவும்' என்றதால் (கள் + மலர்ந்து = கண் மலர்ந்து) என வந்ததாகக்கொண்டு, நெல் போர்க்களத்திலும், மீன் விலைக்களத்திலும், கரும்பு ஆலைக்களத்திலும் பரந்துவிளங்குமெனச் சாதுரியம்பட உரைப்பர். வண்டு கண்மலர்ந்தொளிர்தலாவது, மகளிர் கண்போல் விளங்குதல். இதிலும் எதிர்நிலையணி தொனித்தல் காண்க. கருநிறம்பற்றியும், இடையிடையே பரந்த கோடுகளுடைமைபற்றியும், வண்டு கண்களுக்குவமையாம். கடைசியர்முகம் கண்மலர்ந்தொளிர்த லாவது, கண்களால் மலர்ச்சியுற்றுவிளங்கல். இதனுல் அவர்களது கண் வனப்புச் சொல்லப்பட்டதாம். போது கண்மலர்ந்தொளிர்தலாவது, தேனினுல் நிறைந்து விளங்கல். இங்ஙனம் மருதநிலச்சிறப்பைப் புனைந்துரைப்பானறொடங்கிக் கண்மலர்ந்தொளிரு மென்ற ஒன்றனையே மேற் குறிக்கப்பட்ட பலபொருள்களுக்கும் பயனிலையாக வெவ்வேறு பொருள்பட அமைத்துரைத்த நம் கவிச்சக்கரவர்த்தியாரது அரிய பெரிய புலமைத்திறம் நம்மனோரனைவராலும் பெரிதுங் கொண்டாடற் பாலதாம்.

இங்ஙனம்,

பண்டிதர் ரா. திம்மப்ப ஐயர்,

தலைமைத்தமிழ்ப்பண்டிதர், முனிசிபல் கலாசாலை,

சேலம்.

செந்தமிழ்ச்சங்கம்.

மறைஞானசம்பந்தன் திருவாய்மலர்ந்து எந்தைபிரானிணையடி ஏற்றுதற்கியைந்த தண்டமிழ்நன்மொழியானது, பண்டுதொட் டின்று வரைநின்றுலவு தென்னாட்டகத்தும், தன்புராதனவளங்குறைந்து வழக்குச்சிறிதருகிச்செல்லுழித் தமிழரின் அருந்தவப்பேற்றான் மருந் தென வந்துதித்த தெரிதமிழ்நிறை திருவாளன் பாண்டித்துரைத் தேவன்நிறுவிய நான்காம்சங்கம் இதுகாறும் புரிந்துள செந்தமிழ்த் தொண்டு எண்டிசையும் எம்மவராற் பாராட்டற்பாலதேயாம். இச் சங்கத்து முயற்சிகளின்பேறாக எம்மவர்பால் இதுவரை புலப்படாது மறைவாகவிருந்து வளர்ந்துவந்த சுயமொழிப்பற்றானது தலைதூக்கி வெளிநின்று தமிழ்நன்மக்கள்யாவரையும் அத்தனித்தமிழ்மொழியை மிகுந்த ஆர்வத்துடன் மேலும்மேலும் பயிலுமாறு உற்சாகப்படுத்தி நிற்பதைக் காண்டொறும், அம்ம! அறிவுடையோர் அடையும் மகிழ்வுக் கெல்லைகுறித்தல் எளிதோ ?

செந்தமிழ்ச்சங்கத்தின்கீர்த்தி நிலைபேறடைவதற்கும், தமிழ்மொழி வளர்ச்சிக்கும் வேண்டியவழிகளிலெல்லாம் உழைப்பதற் குடன்பட்டு நிற்கும் தமிழ்ப்பற்றுடையார்பலர் இச்சங்கத்தின் அங்கத்தினராக இருந்துவருகின்றனர்; சங்கத்தால் நடத்தப்பட்டுவரும் பரீட்சைகளில் சித்திபெற்ற பண்டிதசிகாமணிகள் பலருளர். தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமைவாய்ந்த அங்கத்தினர் பலர் உளர்; சங்கத்தின் அங்கத்தவராத லினாலே தாம் 'வித்வான்' என்று சொல்லிக்கொள்ளும் அங்கத்தினர் பலருண்டு. இவர்களுள், பலர் தமதுகல்வித்திறனைப் பிறர்க்குப் புலப்படுத்தும்நோக்கமாகக் கெம்பீரமான பிரசங்கங்கள் செய்கிறார்கள்; மேனூலாராய்ச்சி செய்துவருகிறார்கள்; பெரும்நூல்களும் சிலர் எழுதி

வருகின்றார்கள். ஆயினும் தமிழ்மொழிவளர்ச்சி சிறப்புற்றுச் சீக்கிரத்தில், சித்தியடைவதற் கின்றியமையாத சில முயற்சிகளில் நமது சங்கம் சிரத்தையெடாதிருப்பது ஆச்சரியத்துக்குரியதாம். ஆங்கிலமொழியி லுள்ள அரிய நூல்கள் பல தமிழில்பெயர்த்து யாக்கப்படல்வேண்டும். சாஸ் திரசம்பந்தமான சில நூல்களும், பாடசாலைகளின் உபயோகத்துக்காகச் சில வாசினைப்புத்தகம், இலக்கணம், பூமிசாஸ்திரம், சுகாதாரம் முதலாய நூல்களும் செந்தமிழ்நடையில் அவசியம் இயற்றப்படல்வேண்டும். இக்குறையினைக் களைவான் கருதிச் செந்தமிழ்ச்சங்கமே முன்வந்திடா தொழியின், பின் யாரே இப்பெருமுயற்சியில் தலையிடவல்லார்?

சர்வகலாசாலைப் பரீட்சைகளுக்குக் குறிக்கப்படும் வசனபாட புத்தகங்களுள் எத்தனை நமது சங்கத்துப் பண்டிதர்களா லியற்றப் பட்டனவென வாராயுங்கால் அன்னவர் பலரின்பெயரைத்தானும் தமிழுலகம் இன்னும் அறியவில்லை என்பது புலனாகும்.

இவர்கள் தனித்தேனும் சிலர் ஒருங்குசேர்ந்தேனும் தமிழுலகத்துக் கிந்நாட்களில் அவசியம் வேண்டப்படும் நூல்கள் இயற்றி உதவுவாரா யின் அவர்செய்நன்றி என்றும் மறக்கற்பாலதன்று.

பொ. ஆ.

ஸ்ரீ:

புத்தகமதிப்புரை.

தமிழ்அகராதி :—சென்னைராஜாங்கத்து யூனிவர்ஸிட்டியாரால் சில வருடங்களாயாராய்ந்து அச்சிடத்தொடங்கிவேலைநடந்துவருகிற தமிழகராதியின் முதற்றொகுதியின், முதற்பகுதி அச்சிட்டுவெளியிடப்பட்டிருக்கிறது. அதில் அகர, ஆகாரமுதன்மொழிகளடங்கிய 266 பக்கங்களுள்ளன. ஒவ்வொருபதங்களும் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதி இருமொழியிலும் பொருளெழுதப்பட்டு தமிழில் இயன்றவளவு இலக்கியங்களில் அப்பதங்கள் வழங்கியவிடங்களும் காட்டப்பட்டிருக்கின்றன. தமிழ்ச்சொல்லோடொத்தவடசொல் முதலியவற்றைத் தனியேபிரித்து ஆங்கிலவெழுத்தால் உச்சாரணபேதம் காட்டிப் பொருளெழுதப்பட்டிருக்கிறது. பலபொருளொருசொற்களுள் செம்மொழியாகநின்று பொருள்வேறுபடுஞ்சொற்களைத் தனியாகவும், பிரிமொழியாகநின்று பொருள்வேறுபடுஞ் சொற்களைத்தனியாகவும் வெவ்வேறிலக்கங்கொடுத்தெழுதப்பட்டிருக்கிறது. வினைப்பகுதிகளின் விகரணவேறுபாடுகளை யறிதற்கேற்றசங்கேதக்குறிகள் எண்ணால் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறான குறிமுதலியவற்றைக் காட்டற்குரிய சங்கேத அட்டவணை யொன்று சேர்க்கப்படுமென்றுதோன்றுகிறது. இப்போது பதித்துவருகிற முறையானது இதுவரை தமிழகராதிபதித்தஒருவரும் கையாளாத புதியமுறையாகக்காணப்படுகிறது. இப்புத்தகம் தமிழர் ஆங்கிலர்என்னு மிருதிறத்தார்க்கு மிகப்பயன்படத்தக்கது. இந்தப் பகுதியின்விலை ரூபா. 4.

கம்பராமாயணம் ஆரணியகாண்டம்.—(சருக்கம்), இது, சென்னை ஸி, குமாரசாமிநாயுடு ஸன் ஸால் பதிக்கப்பட்டது. இதில் கம்ப

ராமாயணத்தில் ஆரணியகாண்டத்துள்ள பாடங்களில் மாணவர்க்குப் படிக்கும்போதே இனிமையும் பொருளுணர்ச்சியும் தோன்றத்தக்க 380 பாடல்களைப் பாக்கப்பொறுக்கிச்சேர்த்து இடையிலுள்ள விடயங்களைத் தெளிவான வசனநடையிலெழுதிப் பாடல்களுக்கு சந்தர்ப்பங்காட்டிக் குறிப்புரையுமெழுதிச் சேர்த்திருப்பது திருப்திகாமாயிருக்கிறது. இவ்வாறே பாலகாண்டம், அயோத்தியாகாண்டங்களும் பதிப்பிக்கப் பட்டனவென்றுதெரிகிறது. இவை 4, 5, 6, ம் பாரங்களிற்படிக்கும் மாணவர்க்கும் பயன்படத்தக்கது. இதன் விலை அணா. 12.

தமிழ்க்கல்வி.—இது மணத்தட்டை பிரும்ம ஸ்ரீ எஸ். துரைசாமி ஐயாவர்களால் எழுதப்பட்ட 120 பக்கங்களடங்கிய புத்தகம். இதில் கல்வியின் சிறப்பைப்பற்றித்தாமறிந்தபடி பலவாறுகச்சொல்லியும், தேசீயக் கல்வியின் அருமை பெருமைகளைப் பாராட்டியும், தற்காலநிலையில் அது சீர்கேடடைந்திருப்பதையும் அது ஒழுங்காக நடைபெறவேண்டுமென்பதையும்பற்றித் தமக்குத்தோன்றும் விஷயங்களைப் பலர்க்கும் தெரிவிக்கும் ஆதுரத்தோடெழுதப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா. 8.

ஆரோக்கியவழி.—மகாத்மா காந்தி எழுதியநூலின் தமிழ்மொழி பெயர்ப்பு. இது சென்னை கணேசன் கம்பெனியாரால் அச்சிடப்பட்டது. இதில் சரீராரோக்கியத்துக்கு உரிய ஒழுக்கமுறைகளும், உணவு, தேகாப்பியாசம் ரோகசிகிச்சை முதலியவிஷயங்களும் எழுதப்பட்டுள்ளன. இதன் விலை அணா. 12.

664. கைய தவன்கடலுட் சங்கமாற் பூண்டதுவும்
செய்யசங் கீன்ற செழுமுத்தால்—மெய்யதுவும்
மன்பொரு வேன்மாறன் வார்பொதியிற் சந்தனமால்
என்பெறா வாடுமென் றோள்.

665. நாணாக்காற் பெண்மை நலனழியு முன்னின்று
காணாக்காற் கைவளையுஞ் சோருமாற்—காணேனான்
வண்டெவ்வந் தீர்தார் வயமான் வழுதியைக்
கண்டெவ்வந் தீர்வதோ ராறு.

666. வாருயர் பெண்ணை வருகுரும்பை வாய்ந்தனபோல்
எரிய வாயினு மென்செய்யுங்—கூரிய
கோட்டானைத் தென்னன் குளிர்சாந் தணியகலங்
கோட்டுமண் கொள்ளா முலை.

667. எற்பக் குடைந்தாடி லேசுவ ரல்லாக்கால்
மாற்றி யிருந்தா ளெனவுரைப்பர்—வேற்கண்ணாய்
கொல்யானை மாறன் குளிர்புனல் வையைநீ
ரெல்லா மெனக்கோ ரிடர்.

668. கூடற் பெருமானைக் கூடலார் கோமானைக்
கூடப் பெறுவனேற் கூடென்று—கூட
லிழைப்பாள்போற் காட்டி யிழையா திருக்கும்
பிழைப்பிற் பிழைபாக் கறிந்து.

669. என்னை யுரையலென் பேருரைய லூருரையல்
அன்னையு மின்ன ளெனவுரையல்—பின்னையும்
தண்படா யானைத் தமிழ்நர் பெருமாற்கென்
கண்படா வாறே யுரை.

670. வளையவாய் நீண்டதோள் வாட்கணா யன்னை
இளையளாய் மூத்திலள் கொல்லோ—தளையவிழ்தார்
மண்கொண்ட தானை மறங்கனல்வேன் மாறனைக்
கண்கொண்டு நோக்கலென் பாள்.

671. கொடிபாடித் தேர்பாடிக் கொய்தண்டார் மாறன்
முடிபாடி முத்தாரம் பாடித்—தொடியுலக்கை
கைம்மனையி லோச்சப் பெறுவனோ யானுமோ
ரம்மனைக் காவ லுளேன்.

(664—671) முத்தொள்ளாயிரம்.

672. கோட்டெங்கு [1]சூழ்கூடற் கோமானைக் கூடவென
வேட்டாங்குச் சென்றவென் னெஞ்சறியாள்—கூட்டே
குறும்பூழ் பறப்பித்த வேட்டுவன்போ லன்னை
வெறுங்கூடு காவல்கொண் டாள்.

673. களியானைத் தென்ன னிளங்கோவென் றெள்ளிப்
பணியாரே தம்பா ரிழக்க—அணியாகங்
கைதொழு தேனு மிழக்கோ நறுமாவின்
கொய்தளி ரன்ன நிறம்.

674. கனவை நனவென் றெதிர்விழிக்குங் காணும்
நனவி லெதிர்விழிக்க நாணும்—புனையிழாய்
என்க ணிவையாறு லெவ்வாறோ மாமாறன்
தன்க ணருள்பெறுமா தான்.

675. தளையவிழும் பூங்கோதைத் தாயரே யாவி
களையினுமென் கைதிறந்து காட்டேன்—வளைகொடுபோம்
வன்கண்ணன் வாண்மாறன் மால்யானை தன்னுடன்வந்
தென்கண் புகுந்தா னிரா.

676. ஓராற்றா னென்க ணிமைபொருந்த வந்திலையே
கூரார்வேன் மாறனென் கைப்பற்ற—வாரா
நனவென் றெழுந்திருந்தே னல்வினையொன் றில்லேன்
கனவு மிழந்திருந்த வாறு.

677. உகுவாய் நிலத்த துயர்மணன்மே லேறி
நகுவாய்முத் தீன்றசைந்த சங்கம்—புகுவான்
றிரைவரவு பார்த்திருக்குந் தென்கொற்கைக் கோமா
னுரைவரவு பார்த்திருக்கு நெஞ்சு.

678. மாறடுபோர் மன்னர் மதிக்குடையுஞ் செங்கோலுங்
கூறிடுவாய் நீயோ குளிர்வாடாய்—சோறடுவார்
ஆரத்தாற் றீமூட்டு மம்பொதியிற் கோமாற்கென்
வாரத்தாற் றோற்றேன் வளை.

679. புகுவார்க் கிடங்கொடா போதுவார்க் கொல்கா
நகுவாரை நாணி மறையா—இகுகரையின்
ஏமான் பிணைபோல நின்றதே கூடலார்
கோமான்பின் சென்றவென் னெஞ்சு.

(672—679) முத்தொள்ளாயிரம். [1] சூழ்மாந்தை.

680. பிணிகிடந் தார்க்குப் பிறந்தநாட் போல
அணியிழை யஞ்ச வருமால்—மணியானை
மாறன் வழுதி மணவா மருண்மாலை
சீறியோர் வாடை சினந்து.

681. மாணார்க் கடந்த மறவெம்போர் மாறனைக்
காணுக்கா லாயிரமுஞ் சொல்லுவேன்—கண்டக்காற்
பூணாகந் தாவென்று புல்லப் பெறுவனோ
நாணோ டுடன்பிறந்த நான்.

682. புல்லாதார் வல்லே புலர்கென்பர் புல்லினார்
நில்லா யிரவே நெடிதென்பர்—நல்ல
விராஅமலர்த் தார்மாறன் வெண்சாந் தகலம்
இராவழிப் பட்ட திது.

683. இப்பியீன் றிட்ட வெறிகதிர் நித்திலங்
கொற்கையே யல்ல படுவது—கொற்கைக்
குருதிவேன் மாறன் குளிர்சாந் தகலங்
கருதியார் கண்ணும் படும்.

684. யானூடத் தானுணர்த்த யானுணரா விட்டதற்பின்
தானூட யானுணர்த்தத் தானுணரான்—தேனூறு
கொய்தார் வழுதி குளிர்சாந் தணியகலம்
மெய்தா திராக்கழிந்த வாறு.

685. வையைக் கிழவன் வயங்குதார் மாணகலந்
தையலா யின்றுநீ நல்கினை நல்காயேற்
கூடலார் கோவொடு நீயும் படுதியே
நாடறியக் கவ்வை யொருங்கு.

686. சென்றதுகொல் போந்ததுகொல் செவ்வி பெறுந்துணையு
நின்றதுகொ னேர்மருங்கிற் கையூன்றி—முன்றின்
முழங்குங் கடாயானை மொய்ம்மலர்த்தார் மாறற்
குழந்துபின் சென்றவென் னெஞ்சு.

687. உழுத வுழுத்தஞ்செய் யூர்க்கன்று மேயக்
கழுதை செவியரிந் தற்றால்—வழுதியைக்
[1]கண்டகருங்க ணிருப்பப் பெரும்பணைத்தோள்
கொண்டன மன்னோ பசப்பு.

(680—683) முத்தொள்ளாயிரம். (684) ஷை; தொல். பொரு. 157. (685) நன். 396. மயிலை. (686) தொல். பொரு. 196. (687) ஷை. ஷை. 489. [1]கண்டன கண்ணீ ருருப்பப்.

(சீதாபிராட்டியின் கைக்கிளை.)

688. ஆள்வினை முடித்த வருந்தவ முனிவன்
வேள்வி போற்றிய விராம னவனே
மிதிலை மூதா ரெய்திய ஞான்றே
மதியுடம் பட்ட மக்கட் சீதை
கடுவிசை வின்னா ணிடியொலி கேளாக்
கேட்ட பாம்பின் வாட்ட மெய்தித்
துயிலெழுந்து மயங்கின ளதாஅன்று மயிலென.

(பொய்கையார்பாட்டு.)

689. ஆழி யிழைப்பப் பகல்போ [1]மிரவெல்லாந்
தோழி துணையாத் துயர்தீரும்—வாழி
நறுமாலை தாராய் திரையவோ வென்னுஞ்
செறுமாலை சென்றடையும் போது.

690. காய்ந்துவிண் டாரையக் காமரு கூடலிற் கண்சிவந்த
வேந்துகண் டாயென்ன வெள்வளை சோரக் கலைநெகிழப்
போந்துகண் டாளொடும் போந்துகண் டேற்கவன் பொன்முடிமேற்
போந்துகண் டாளென்று போந்ததென் மாட்டோர் புறவுரையே.

691. அணியாய செம்பழுக்காய் வெள்ளிலையொ டேந்திப்
பணியா யெமபெருமா னென்று—கணியார்வாய்க்
கோணலங் கேட்பதூஉங் கொண்கர் பெருமானார்
தோணலஞ் சேர்தற் பொருட்டு.

692. மதுப்பொழிதார் மன்னவனை மால்கரிமேற் கண்டு
விதிர்ப்ப மயிரரும்பு [1]மெய்யும்—புதைத்தாள்
வளவா ரணநெடுங்கை [2]நண்டுவலை வாய்ந்த
இளவாடை கூர்ந்த தெனா.

693. துடியடித் தோற்செவித் தூங்குகைந் நால்வாய்ப்
பிடியேயா னின்னை யிரப்பல்—கடிகமழ்தார்ச்
சேலேக வண்ணனொடு சேரி புகுதலுமெஞ்
சாலேகஞ் சார நட.

---

(688) தொல். பொரு. 54. (689) யாப். வி. 45, 95. [1]இரவரில் (690) ஷெ. 94. (691) தொல். புறத். 83. (692) தண்டி. 65; வீரசோ. அலங். 27. [1]மெய்யிற். [2]வண்டுவலை. தோய்ந்த. (693) முத்தொள்ளாயிரம்.

694. தவளை யுகளுந் தடம்புனனீர் நாடன்
இவளை வளைகரந்தா னென்றாற்—றவளைத்
தனிக்காவல் வெண்குடையான் றண்ணளியு மஃதே
இனிக்காவ லாமோ வெமக்கு.

(வத்தவர்கோ.)

695. வேட்டொழிவ தல்லால் வினைஞர் விளைவயலுட்
டோட்ட கடைஞர் சுடுநந்து—மோட்டாமை
வன்புறத்து மீதுடைக்கும் வச்சத் திளங்கோவை
இன்புறுத்த வல்லமோ யாம்.

696. வாடை குளிர மருந்தறிவா ரில்லையோ
கூட வினியொருகாற் கூடாதோ—ஓடை
மதவா ரணத்துதயன் வத்தவர்கோ னாட்டிற்
கதவான தோதமியேன் கண்.

உட்கோள்.

697. உருகி யுடல்கருகி யுள்ளீரல் பற்றி
எரிவ தவியாதென் செய்கேன்—வரியரவ
நஞ்சிலே தோய்ந்த நளின விழிப்பெருமாள்
நெஞ்சிலே யிட்ட நெருப்பு.

மடலேற்றம்.

698. கடலன்ன காமத்த ராயினும் பெண்டிர்
மடலூரார் மைந்தர்மே லென்ப—மடலூர்தல்
காட்டுகேன் வம்மின் கலிவஞ்சி யார்கோமான்
வேட்டமா மேல்கொண்ட போழ்து.

ஏறுகோள்.

699. காளையொ டாடிக் கதக்காரி தோன்றுங்கால்
வாளுழுவ மக்களொ டேகுமா—கோளொடும்
பொன்றுமா நங்காய்நங் கேள்.

(சிஃறாழிசைக் கொச்சகக்கலிவகை)

700. மாயவனாய் முற்றோன்றி மணிநிரைகாத் தணிபெற்ற
ஆயனேர் குடையினரா யரசர்கள் பலர்கூடி

---

(694) வீரசோ. அலங். 17. (695) ஷை. 11 மேற். (696) பெருங்கதை, முகவுரை, பக். 9. (697) தனிப்பா (அம்பிகாபதிவாக்கென்பர்). (698) தொல். அகத். 35. (699) யாப். வி. 59. (700) ஷை. 86.

மணிநின்ற மேனியாள் மதநகையைப் பெறுகுவார்
அணிநின்ற விடைகொண்டா ரெனச்சொல்லி யறைந்தனரே; (தாவு)
தானவ்வழி,
எழுப்பற்றிச் சனந்துறுமி யெவ்வழியு மியமியம்ப
விழுக்குற்று நின்றாரும் பலர்;
ஆங்கே,
வாளுற்ற கண்ணுளை மகிழ்விப்பா மெனக்கருதிக்
கோளுற்று நின்றாரும் பலர்.
ஆண்டே,
இத்திறத்தாற் குறையென்னை யிருங்கிளைக்குங் கேடென்னப்
பற்றாது நின்றாரும் பலர். (மூன்றுந் தாழிசை)
அதுகண்டு, (தனிச்சொல்)
மைவரை நிறத்துத்தன்ன மாலை பியருழக்
கைவரை நில்லாது கடிதேற் றெருத்தொடிப்ப
அழுங்கின ராய மமர்ந்தது சுற்றம்
எழுந்தது பல்சன மேறுதொழு விட்டன
கோல வரிவளை தானுங்
கால்வன போலுங் கடிமகிழ் வோட்கே.

---

*காஞ்சி.

மறக்காஞ்சி.

(போர்முடிந்த பின் களம்புக்கு, நடுகல்லாயினுனை ஒருவீரன்கண்டு நிகழ்த்தியது).

701. பொருது வடுப்பட்ட யாக்கை நாணிக்
கொன்று முகந்தேய்ந்த வெஃகந் தாங்கிச்
சென்று களம்புக்க யானை தன்னொடு
முன்மலைந்து மடிந்த வோடா விடலை
நடுகன் னெடுநிலை நோக்கி யாங்குத்தன்
புண்வாய் கிழித்தனன் புகழ்ோ னந்நிலைச்
சென்றுழிச் செல்க மாதோ வெண்குடை
அரசுமலைந்து தாங்கிய களிறுமடி பறந்தலை
முரண்கெழு தெவ்வர் காண
இவன்போ லிந்நிலை பெறுகயா னெனவே.

---

*இத்திணை, வஞ்சியை யடுத்துவைத்துப் படிக்கத்தக்கது. (701) தொல். பொரு. 79 நச்.

மூதின்முல்லை.

(துறக்கத்துப் பெயர்ந்த *நெடுங்கோளன்தாய் இறந்துபட்ட தலைப்பெயனிலை.)

702. எற்கண் டறிகோ வெற்கண் டறிகோ
என்மக னாத லெற்கண் டறிகோ
கண்ணே கணையுழந் தனவே தலையின்
வண்ண மாலையும் வாளிவிடக் குறைந்தன
வாயே, பொங்குநுனைப் பகழி மூழ்கலிற் [1]புலாவழித்
தாவ நாழிகை யம்புசெறித் தற்றே
நெஞ்சே வெஞ்சரங் கடந்தன குறங்கே
நிறங்கரந்து பல்சர நிரைத்தன வதனால்
அவிழ்பூ வப்பணைக் கிடந்தோன்
[2]கமழ்பூங் கழற்றீங் காய்போன் றனனே.

703. குரங்கு மேனித் திரங்குமுகச் செதுமுலை
நரைமூ தாட்டி வினவுதி யாயின்
நும்மகன் கொல்லோ வறியே னிம்மகன்
கொற்ற வெண்குடை மன்னர்க் குதவிச்
செஞ்சோற் றருங்கடன் வெஞ்சமத் தாற்றிக்
களிறுதலை யடுத்து மாகா னீட்டிப்
பிளிறுகுரன் முரச மெத்தணை யாகப்
பருந்தின் செறுநிழல் பந்த ராக
அழிபிணக் குன்றே வேலி யாக
கழுகுணக் கிடந்த [3]காளை
நும்மகன் கொல்லோ யானறி யேனே.

704. வாழிய துடிய வாழிய துடிய
என்மகன், ஆர்த்தெறிந் தனனோ வெறிந்தார்த் தனனோ
ஆர்த்து மெறியா னெறிந்து மமரான்
கையது வேலே காலது கழலே
மெய்யது சினமே மேற்சென் றனனே
வேந்த ரெல்லாந் தன்னோக் கினரே
நோக்கி னோக்கான் முறுவலன் றூக்கித்
தழீஇந் தாமெனத் தண்ணுமை
கழித்தா ளொள்வாள் வீழ்ந்தன களிறே.

---

*நெடுங்கோளன். (702) தகடூர்யாத். தொல். பொரு. 79 நச். [1]புலர்வழித். [2]கவிழ்பூங்கழற்றின். (703, 704) தகடூர்யாத், [3]காளைநும், மகன்கொலோ வறியேன் யானிம் மகனே.

705. வாதுவல் வயிறே வாதுவல் வயிறே
நோவே னத்தை நின்னீன் றனனே
பொருந்தா மன்ன ரருஞ்சம முருக்கி
அக்களத் தொழிதல் செல்லாய் மிக்க
புகர்முகக் குஞ்சர மெறிந்த வெஃகம்
அதன்முகத் தொழிய நீபோந் தனையே
அதனால், எம்மில் செய்யாப் பெரும்பழி செய்த
கல்லாக் காளையை யீன்ற வயிறே.

706. தருமமு மீதேயாந் தானமு மீதாங்
கருமமுங் காணுங்கா லீதாஞ்—செருமுனையிற்
கோள்வாண் மறவர் தலைதுமிப்ப வென்மகன்
வாள்வாய் முயங்கப் பெறின்.

ஆஞ்சிக்காஞ்சி.

707. இன்ப முடம்புகொண் டெய்துவிர் காண்மினோ
அன்பி னுயிர்புரக்கு மாரணங்கு—தன்கணவ
னல்லாமை யுட்கொள்ளு மச்சம் பயந்ததே
புல்லார்வேன் மெய்சிதைத்த புண்.

பேய்க்காஞ்சி.

708. புண்ணனந்த ருற்றுனைப் போற்றுந ரின்மையிற்
கண்ணனந்த ரில்லாப்பேய் காத்தனவே—யுண்ணு
முளையோரி யுட்க வுணர்வொடுசா யாத
இளையோன் கிடந்த விடத்து.

தூஉறவு.

709. கருந்தடங்கண் மங்கையரை நோக்குற்ற கண்ணும்
பெருந்தடந் [1]தோட்பிணித்த கையும்—பருந்தின்
வளைவாயிற் பெய்யேனேல் வந்திரந்தார் துன்பங்
களையாது மாற்றுகவென் கை.

பூசன்மயக்கம்.

710. இரவலர் வம்மி னெனவிசைத்த லன்றிப்
புரவலன் மாய்ந்தழியும் பொங்கும்—[1]உரைமயங்க
வேற்கண் ணியாழுத வெம்பூசல் கேட்டடங்காத்
தோற்கண்ண போலுந் துடி.

(705-706) தகடூர்யாத். (707) ஷை. தொல். பொரு. 79 நச். (708) ஷை. 79 நச். (709) வீரசோ. பொருட். 17 மேற். [1]தோள் யாப்புறுத்த. (710) தொல். பொரு. 79. (தகடூர்யாத்) [1]உரையழுங்க.

பையுள்.

(சுற்றத்தாரின்றி மனைவியர் தந்தங் கொழுநரைத் தழீஇ அழுதது)

711. *மழைகூர் பானாட் கழைபிறங் கடுக்கத்துப்*
புலிவழங் [1]கதரிடைப் பாம்புதூங் கிறுவரை
இருள்புக்குத் [2]துணிந்த வெண்குவாற் கல்லளை
ஒருதனி வைகிய தனைத்தே பெருவளத்து
வேனின் மூதூர்ப் பூநாறு நறும்பகல்
எழுதுசுவர் மாடத்துக் கிளையுடை யொருசிறை
யவரின்று நிகழ்தரு முறவே யதனால்
அழுதுபனி கலுழ்ந்தவெங் கண்ணே யவ்வழி
நீர்நீந்து பாவை யசைவது நோக்கிச்
சேணிடை யகன்ற துயிலே யதுவினி
யவருடைக் கனவோ டிவ்வழி யொருநாள்
வாரா தாயினும் யாதாங் கொல்லோ
மெலிந்து மெலியுமென் யாக்கையிற்
கழிந்து கழியுமென் னாருயிர் நிலையே.

தபுதாரநிலை.

712. *கழல்சேர்ந்த தாள்விடலை காதலிமெய் தீண்டும்*
அழல்சேர்ந்து தன்னெஞ் சயர்ந்தான்—குழல்சேர்ந்த
தாமந் தரியா தசையுந் தளிர்மேனி
ஏமந் தரிக்குமோ வென்று.

காடுவாழ்த்து.

713. *உலகு பொதியுருவந் தன்னுருவ மாகப்*
பலர்பரவத் தக்க பறந்தலைநன் காடு
புலவுங்கொ லென்போற் புலவுக் களத்தோ
டிகனெடுவே லானை யிழந்து.

கையறுநிலை.

(உயர்ந்தோனொருவன் இறந்தநிலை.)

714. *தொடியுடைய தோண்மணந்தனன்*
கடிகாவிற் பூச்சூடினன்
நறைகமழ் சாந்தநீவினன்
செற்றோரை வழிதேய்த்தனன்

---

(711) தொல். பொரு. [1] காரிடை. [2] துறந்த. (712) தண்டி. 70 மேற்; வீரசோ. அலங். 28 மேற். (713) தொல். பொரு. 79 மேற். (714) யாப். வி. 90.

நட்டோரை யுயர்வுகூறினன்
வலியரென வாய்மொழியலன்
மெலியரென மேற்செல்லலன்
பிறரையொன் றிரப்பறியலன்
இரப்போர்க்கு மறுப்பறியலன்
வருபடையை எதிர்கழறினன்
பெயர்படையைப் புறங்கண்டனன்
நெடுந்தெருவிற் றேரோட்டினன்
[1]கடும்பரிய மாகடாயினன்
உடல்சினத்த களிறூர்ந்தனன்
[2]தீந்தேறற் றசும்புதொலைச்சினன்
வானுவப்பப் பசிதீர்த்தனன்
மயக்குடைய மொழிவிடுத்தனன்
ஆங்குச்
செய்வகை யெல்லாஞ் செய்தன னாதலின்
இடுக வொன்றோ சுடுக வொன்றோ
படுவழிப் படுகவிப் [3]புகழ்வெய்யோன் றலையே.

715. தேரோன் மகன்பட்ட செங்களத்து ளிவ்வுடம்பிற்
றீராத பண்பிற் றிருமடந்தை—வாரா
வுலகத் துடம்பிற் கொழிந்தனள் கொல்லோ
அலகற்ற கற்பி னவள்.

பொதுவியல்.

போந்தைமலைந்தாடியது.

716. ஏழக மேற்கொண் டிளையோ னிகல்வென்றான்
வேழ மிவனேற வேந்துளவோ—ஏழுலகுந்
தாந்தயங்கு நாகந் தலைதயங்க வாடாமோ
போந்தையுங் கண்ணி புனைந்து.

வேம்புமலைந்தாடியது.

717. குறும்பூழ்ப்போர் கையெறிந்து கொற்றம் பெறுதல்
இறும்பூதென் றியாமாடல் வேண்டா—செறுங்கோன்
குலமதிக்கு மாறறியிற் கொற்றவன் வேம்பு
தலைமலையற் பாலதூஉ மன்று.

---

[1]கடும்பரி யூர்கடாயினன். [2]தீஞ்சோற். [3]இகல் வெய்யோன். (715)தொல், பொரு, 79 நச், (716, 717), ஷை. ஷை. 60 நச்.

ஆர்மலைந்தாடியது.

718. ஆர்வேய்ந்த கோலத்தோ டாடுவர் பாடுவர்
போர்வேந்தர் பெற்றநாள் போன்றுவப்பர்—சீர்சால்
பறைகெழு வாரணப்போர் [1]பண்டிகழ்ந்தோ ரின்று
சிறைகெழு வாரணப்போர் செய்து.

வேலன்வெறியாட்டு.

719. அமரகத்துத் தன்னை மறந்தாடி யாங்குத்
தமரகத்துத் தன்மறந் தாடுங்—குமரன்முன்
கார்க்காடு நாறுங் களனிழைத்துக் [1]காரிகையா
ரேர்க்காடுங் காளை யிவன்.

நெடுமொழிகூறல்.

720. தானால் விலங்காற் றனித்தாற் பிறன்வரைத்தால்
யானை யெறிதல் விளிவரவால்—யானை
ஒருகை யுடைய தெறிவலோ யானும்
இருகை சுமந்துவாழ் வேன்.

வாள்வாய்த்துக்கவிழ்ந்த பிள்ளைநிலை.

721. ஆடும் பொழுதி னறுகயிற்றுப் பாவைபோல்
வீடுஞ் சிறுவன்றாய் மெய்ம்மகிழ்ந்தாள்—வீடுவோன்
வாள்வாயின் வீழ்ந்த மறவர்தந் தாயரே
கேளா வழுதார் கிடந்து.

வருதார் தாங்கும் பிள்ளைநிலை.

722. ஏற்றெறிந்தார் தார்தாங்கி வெல்வருகென் றேவினாள்
கூற்றினுந் தாயே கொடியளே—போர்க்களிறு
காணா விளமையாற் கண்டிலன்றே நின்றிலனேல்
மாணாருள் யார்பிழைப்பார் மற்று.

பிள்ளையாட்டு.

723. வன்கண் மறமன்னன் வாண்மலைந்து மேம்பட்ட
புன்றலை யொள்வாட் புதல்வற்கண்—டன்புற்றுக்
கான்கெழு நாடு கொடுத்தார் கருதார்க்கு
வான்கெழு நாடு வர.

---

(718) தொல். பொரு. 60 நச. [1]பண்டிழந்தோ. (719) ஷெ. ஷெ. 60 நச. காரிகை, யார்க்காடுங். (720–723) ஷெ.

அரசர்புகழைக் காட்டுவாழ்வோர்க்குக்கூறியது.

724. வீங்குசெலற் பருதி வெவ்வெயி லெறித்தலின்
[1]நோங்க ணோக்கா தாங்கு நீபோய்
அரசுநுகம் பூண்ட பின்னர் நின்னிலை
முரசுடை வேந்தர் முகந்திரிந் தனரே
அஃதான்று,
உவவுமதி நோக்குநர் போலப் பாணரொடு
வயிரியர் பொருநர்நின் பதிநோக் கினரே
அதனால்,
[2]அதருங் கோடு முதலிய கூட்டுண்
டிகலி னிசைமேஎந் தோன்றித்
[3]நீதில வாகிய நீபெறு நாளே.

உன்னநிலை.

725. முன்னங் குழையவுங் கோடெலா மொய்தளிரீன்
றுன்னங் குழையொலித் தோங்குவாய்—மன்னரைக்
கொன்று களங்கொள்ளுங் கொல்யானை வேந்தனை
வென்றுகளங் கொள்ளுமேல் வேந்து.

726. பொன்னன்ன பூவிற் சிறிய விலைப்புன்கால்
உன்னப் பகைவனெங் கோன்.

கழனிலைக்கூத்து.

727. மீளாது பெற்ற விறற்கழலோன் வாளாட்டின்
வாளாடு கூத்திவந் தாடினாள்—வாளாட்டின்
மண்ணாளு மன்னரே பெண்ணாவார் வண்மைக்குப்
பெண்ணாடின் யாதாம் பிற.

கூதிர்ப்பாசறை.

728. கவலை மறுகிற் கடுங்கண் மறவர்
உவலைசெய் கூரை யொடுங்கத்—துவலைசெய்
கூதிர் நலியவு முள்ளான் கொடித்தேரான்
மூதின் மடவாண் முயக்கு.

(724—727). ௸. [1]ஆங்கண், ஆங்குண். [2]அதனாங், [3]பலவா கியநில.
(728) ௸; பொரு. 76.

729. வாடை நலிய வடிக்கண்ணாள் தோணசைஇ
ஓடை மழகளிற்று னுள்ளான்கொல்—கோடல்
முகையோ டலமர முற்றெறிபோற் பொங்கிப்
படையோடு பாசறையு ளான்.

நடுகற் காட்சி.

730. தாழி கவிப்பத் தவஞ்செய்வார் மண்ணாக
வாழிய நோற்றனை மால்வரை—ஆழிசூழ்
மண்டில மாற்று மறப்புகழோன் சீர்பொறிப்பக்
கண்டனை னின்மாட்டோர் கல்.

731. கல்லாயு மெற்றெறிந்து காண்டற் கெளிவந்த
வல்லாண் விடலைக்கு வம்மினோ—வெல்புகழாற்
சீரியல் பாடல் சிதையாமல் யாம்பாடத்
தூரிய மெல்லாந் தொட.

கால்கோள்.

732. வரையறை சூழ்கிடக்கை மாத்தாட் பெருங்கல்
வரையறை செய்யிய வம்மோ—வரையறை
வாராப் பெரும்புகழ் வல்வேல் விடலைக்கும
ஓராற்றாற் செய்வ துடைத்து.

733. காப்புநூல் யாத்துக் கடிகமழ் நீராட்டிப்
பூப்பலி.பெய்து புகைகொளீஇ—மீப்படர்ந்த
காளை நடுகற சிறப்பயர்ந்து கால்கொண்மின்
நாளை [1]வரக்கடவ நாள்.

நீர்ப்படை.

734. வாளமர் வீழ்ந்த மறவோன்ம [2]லீர்த்தொழுக்கிற்
கேளி ரடையக் கிளர்ந்தெழுந்து—நீள்விசும்பிற
கார்ப்படுத்த வல்லேறு போலக் கழலோன்கல்
நீர்படுத்தார் கண்ணீரி னின்று.

735. பல்லா பெயர்த்து நல்வழிப படர்ந்தோன்
கல்சொரிந் தாட்டிய நீரே தொல்லை
வான்வழங்கு நீரினுந் தூய்தே யதனாற்
கண்ணீ ரருவியுங் கழீஇத்
தெண்ணீ ராடுமின் தீர்த்தமா மதுவே.

---

(729) பத்துப்பாட்டு. பக். 344. (730-735) தொல். பொரு. 60 நச்.
[1]வரக்கடவா. [2]லீர்த்தொழுக்கிக்.

கல்நாட்டியது.

736. சீர்த்த துகளிற்றாய்த் தெய்வச் சிறப்பெய்த
நீர்ப்படுத் தற்கு நிலைகுறித்துப்—போர்க்களத்து
மன்னட்ட வென்றி மறவோன் [1]பெயர்பொறித்துக்
கன்னட்டார் கல்சூழ் கடத்து.

நடுகல்லிற் பெயர்முதலிய பொறித்தது.

737. கைவினை மாக்கள் கலுழக்க ணேக்கிழந்துஞ்
செய்வினை வாய்ப்பவே செய்தமைத்தார்—மொய்போர்
மறவர் பிணம்பிறக்கி வாள்வாய்த்து வீழ்ந்தோன்
பிறபெயர்சூழ் கன்மேற் பெரிது.

நடுகற்குச் சிறப்புப்படைத்தது.

738. அன்றுகொ ளாபெயர்த் தாரமரில் வீழ்ந்தோன்கற்
கின்றுகொள் பல்லா னினமெல்லாங்—குன்றாமற்
செய்ம்மினோ சீர்ப்பச் சிறப்பாகத் தீபங்கள்
வைம்மினோ [2]பீடம் வகுத்து.

739. கோள்வாய்த்த சீயம்போற் கொற்றவர்தம் மாவெறிந்து
வாள்வாய்த்து வீழ்ந்த மறவேலாய்—நாள்வாய்த்
திடைகொள லின்றி யெழுத்துடைக் கல்வாய்
மடைகொளல் வேண்டு மகிழ்ந்து.

நடுகல்வாழ்த்து.

740. ஆவாழ் குழக்கன்றாய் வித்துக் களத்தவிந்த
நீவாழ வாழிய நின்னடுகல்—ஓவாத
விற்கோட்ட நீண்டதோள் வேந்தன் பெயர்பொறித்த
பொற்கோட் டிமயமே போன்று.

வள்ளல்.

741. தண்ணளிசேர் திண்சொன மருவுந் தகைமைத்தாய்
எண்ணிய வெப்பொருளு மெந்நாளும்—மண்ணுலகில்
வந்து நமக்களித்து வாழு முகிலொன்று
தந்ததான்[3] முன்னைத் தவம்.

(736—740) தொல். பொரு. 60. நச். [1]பெயர்பொறிப்ப. [2]கோட்டப
(741) தண்டி. 53 மேற். வீரசோ. அலங். 24 மேற். [3]தந்தது.

வள்ளல் வறுமை.

742. [1]கடைகொ ளுலகியற்கை காலத்தின் நீங்கால்
அடைய வறிதாயிற் றன்றே—அடைவோர்க்
கருமை யுடைத்தன்றி யந்தேன் சுவைத்தாய்க்
கருமை விரவாக் கடல்.

அரசர்.

சிபி.

743. சேர்ந்த புறவி னிறைதன் றிருமேனி
ஈர்ந்திட் டுயர்துலைதா னேறினன்—நேர்ந்த
கொடைவீர மோமெய்ந் நிறைகுறையா வன்கட்
படைவீர [2]மோசென்னி பண்பு.

இராமசரிதம்.

(இராமபிரான்கூற்று—பழைய இராமாயணம்).

744. வான்குணத் தெம்பிக்கு [3]மண்ணின் பெருஞ்செல்வம்
யான்கொடுப்பேற் கெங்கோனு [4]மீந்தளித்தான்—தேன்போய்க்
கரும்பேறு நன்னாட்டார் காவலன்றன் றேவி
[5]பெரும்பேறு மற்றுண்டோ பேசு.

(பகைச்சேனை வரவை இராவணற்கு ஒற்றன் அறிவித்தது.)

745. ஐயிருப தோசனையு மாங்கோ ரிடமின்றிக்
கைபரந்த சேனைக் கடலொலிப்பத்—தையல்
அழிவந் திராமன் வடகரையா னென்றான்
விழிவந்து வேறாக மீட்டு.

(இராமபிரான்பெருமைபற்றிய கவிக்கூற்று).

746. மற்றிவனை மாலென் றறிந்தாலவ் வாளரக்கன்
பெற்றி கருதுவதென் பேதையர்காண்—மற்றிவன்றன்
கண்டான் கடைசிவத்தற் குண்டோ கடலிலங்கை
வண்டா ரரக்கன் வலி.

---

(742) தண்டி. 53 மேற்; வீரசோ. அலங். 24 மேற். [1]கடைபோல். (743) வீரசோ. அலங் 28 மேற்; தண்டி. 70 மேற்; [2]மோவவன். (744) வீரசோ. அலங். 12 [3]மன்னு. [4]மிக்களித் தான்—ஆன்போய்க், கரும்பேறு நாட்டார் தம். [5]கரும்பேறு மற்றுண்டோ சாற்று. (அச்சுப்பிரதி). (745, 746) ஷை, பொரு, 18.

பாரதநம்பி.

747. கடலு மலையு நேர்படக் கிடந்த
[1]மண்ணக வளாக நண்வெயிற் றுகளினும்
நொய்தா லம்ம தானே யிஃதெவன்
குறித்தன னெடியோன் கொல்லோ மொய்தவ
வாங்குசிலை யிராமன் றம்பி யாங்கவன்
அடிபொறை யாற்றி னல்லது
முடிபொறை யாற்றலன் படிபொறை குறித்தே.

(ஏகவிருத்த ராமாயணம்)

748. தாதையார் சொலராமன் காடு போதல்
சார்ந்துளபொன் மானெனுமா ரீசன் சாதல்
சீதையார் பிரிவெருவை மரணம் பானு
சேயொடுநட் புக்கோடல் வாலி வீடல்
ஓதநீர்க் கடற்பரப்பை யனுமன் றாண்டல்
உயரிலங்கை நகரெரியால் வேவக் காண்டல்
பாதகரா மரக்கரெலா மிறக்கத் தாக்கல்
பாக்கியரா மாயணச்சீர்க் காதை யீதே.

பரசுராமனைக் காசிபன் வேட்பித்த பாட்டு

749. ஈன்ற வுலகளிப்ப வேதிலரைக் காட்டாது
வாங்கியதா யொத்தானம் மாதவத்தோன்—ஈந்த
மழுவா ணெடியோன் வயக்கஞ்சால் வென்றி
வழுவாமற் காட்டிய வாறு.

பார்த்தனும் பாண்டியன்மகளும்.

750. பூண்டாழ் மார்பிற் பொருப்பிற் கோமான்
பாண்டியன் மடமகள் பணைமுலைச் சாந்தம்
வேறு தொடங்கிய விசய னெஞ்சத்
தாரழ லாற்ற,.........................
பொதியிற் சாந்த மெல்லாம் பொருதிரை
முத்தினு முழங்கழற் செந்தீப்
பொத்துவது போலும் புலம்புமுந் துறுத்தே

---

(747) தொல். பொரு. 70 நச்; [1]மண்ணக வளாக நிறைய நண்வெயிற், றுகளினு நொய்தா லம்ம தானே, இஃதெவன் குறித்தனன் கொல்லோமொய்தவ. (748) தமிழ்ப்பு, ச, பக். 62. (749) தொல்.பொரு. 75. நச். (750) ஷை. 54; நச்.